நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வதற்கான தர்ம போதனைகள்

# இதோ நீங்கள் தேடும் தேவதூதன்!

கௌரவமிகு கிரிபத்கொடை ஞானானந்த தேரர்

# இதோ நீங்கள் தேடும் தேவதூதன்!

முதலாம் பதிப்பு: 2014 வருடம் மார்கழி மாதம்

© 2015 All rights Reserved. Shraddha Media Network |www. tamilbuddhist.com
Tel: 0112 571 471 | e-mail : shraddhatv@gmail.com

**கௌரவமிகு.கிரிபத்கொடை ஞானானந்த தேரர்**

சகோதர சிங்கள பௌத்தர்களுக்காக நிகழ்த்திய தர்ம போதனைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டதாகும்.

Contact us,
Website: www.tamilbuddhist.com
facebook: Tamil Buddhist
Phone: (+94)0775554874
skype: uwusri
E-mail :uwusri@gmail.com

## விசேட நன்றிகள்

இப்புனித நூலினை அச்சிடுவதற்கான நிதியுதவியை வழங்கிய திருமதி. கிருஷ்ணவேனி அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்! திருமதி கிருஷ்ணவேனி அவர்களால் சேகரிக்கப்பட்ட இந்த புண்ணியத்தின் விளைவாக, அவர்களும் அவரது குடும்பத்தாரும் வெகு விரைவிலேயே உன்னதமான தர்மத்தினை உய்த்துணர்ந்து கொள்ளும் பாக்கியம் கிட்டுவதாக!

உன்னதமான புத்த பகவானது தர்மம் நூல் வடிவம் பெறுவதற்கு பல்வேறு வகையில் உதவி புரிந்த திரு. ஸ்ரீகாந்தன், திரு. பத்மராஜா, செல்வி. ஜீவப்பிரியா மற்றும் செல்வி. கவினா ஷண்முகம் அவர்ளுக்கு எமது விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

**தமிழில் மொழிபெயர்ப்பு**

செல்வி. ராதிகா சந்திரசேகரன்

# உள்ளடக்கம்.


01. தேவதூத சூத்திரம் - 07

(மஜ்ஜிம நிகாயம்)

02. அனுத்தரிய சூத்திரம். - 53

(அங்குத்தர நிகாயம்)

03. அருஞ்சொற்கள் - 102

**சப்ப பாபஸ்ஸ அகரணங் - குசலஸ்ஸ உபசம்பதா**
**சசித்த பரியோதபனங் - ஏதங் புத்தான சாசனங்**

“சகல பாவங்களையும் செய்யாதிருத்தல், நல்லறத்தையே செய்தல் மற்றும் மனதை தூய்மை படுத்தல் இவையே அனைத்து புத்தர்மார்களதும் போதனையாகும்.”

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ*
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 01.

# இதோ நீங்கள் தேடும் தேவதூதன்!

புண்ணியமிக்கவர்களே!

நாம் இன்று செவிமடுக்கப்போவது மிகவும் விசேடமான போதனை ஒன்றையே! மகிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்து போதித்த போதனைகளிலும் இந்த போதனை அடங்கும். இந்த போதனை மஜ்ஜிம நிகாயம் எனும் புனித நூலில் அடங்குகிறது. இந்த போதனையின் பெயர் தேவதூத சூத்திரமாகும்.

**நினைத்து கூட பார்க்க முடியாததாகும்.**

நாம் இதுவரை அறிந்திறாத பல விடயங்கள் இந்த போதனையில் குறிப்பிடப்படுகிறது. கர்மம் மற்றும் கர்ம வினை தொடர்பாக அறிந்திராதோர், உள்ளதை உள்ளபடி அறிய முடியாதோர் என்போருக்கு நினைத்து கூட பார்க்க முடியாத விடயம் தான் இந்த போதனையில் கூறப்படுகிறது. அதுதான் நரகம். ஆம். இந்த போதனையில் நரகத்தினை பற்றியே குறிப்பிடப்படுகிறது.

**ஏமாற வேண்டாம்.**

இந்த நரகத்திலிருந்து உயிர்கள் நிரந்தரமாகவே மீள்வதற்காகவே புத்த பகவான் ஒருவர் தர்மத்தினை அதாவது நாற்பேருண்மைகளை* போதிக்கிறார். பாருங்கள், இப்போது நாம் மானிட உலகில் பிறந்திருக்கிறோம். நாம் இவ்வுலகத்திலுள்ள பல விடயங்களுக்கு ஏமாறுகிறோம். நாம் அவ்வாறு ஏமாறியவை பின்னாலே இடைவிடாது முதிர்ச்சியடையும் வரை ஓடிக்கொண்டிருக்கிறோம். திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்து போகிறோம். எமது கர்மத்தின் படி நாம் மரணித்து எங்கு சென்று பிறந்தோம் என யாராலுமே கூற முடியாது.

ஆனால் எமக்கு ஒன்று மட்டும் தெளிவாக புலப்படுகிறது. இந்த மனதின் இயல்பினை எம்மால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது என்பதே அதுவாகும். இந்த மனதில் நன்மை மற்றும் தீமை என இருபிரிவுகள் உண்டு. நன்மையான பகுதியை

எம்முள் தோற்றுவிப்பதற்கு நாம் பெரும் சிரமத்தினை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆனால் மனதின் தீமையான பகுதியை தோற்றுவிப்பதற்கு நாம் எவ்வித சிரமத்தினையும் மேற்கொள்ள வேண்டியதில்லை.

**செய்பவருக்கு தான் சிரமம் தெரியும்.**

பாருங்கள், சீலத்தினை (ஒழுக்கத்தினை) நாம் எமது வாழ்விற்கு பழக்கப்படுத்துவது எவ்வளவு கடினமான விடயமென்று. மிகவும் முயற்சியுடனும் வீரியத்துடனும் தான் அதனை செய்ய வேண்டிதாக இருக்கிறது. சமாதியும் (உள்ளத்தின் ஒன்றிணைவு) அப்படித்தான்.

ஆனால் ஏதாவது தீயதை செய்வதற்கு எவ்வித கடினமும் இல்லை. நாம் எமது வாழ்கையையே மீண்டும் திரும்பி பார்த்தால் எமது வாழ்கையில் எமக்கு தவறிய சம்பவங்களில் எமது மனதில் தோன்றிய தீய குணங்களின் தாக்கமே இருந்தது என்பது தெளிவாகும். நன்றாக தத்தமது வாழ்க்கை தொடர்பாக சிந்தித்து பாருங்கள்.

புத்த பகவான் 'இரும்பு அழிவுறுவது இரும்பினில் தோன்றும் துருவினால் தான்.' என மொழிந்துள்ளார். அதேபோல் எமது வாழ்வு அழிவுறுவதும் எம்முள்ளே தோன்றும் ஆசையினால், கோபத்தினால் அல்லது அறியாமையினாலேயே. இந்த மனமாசுகள் எம்முள் இருப்பதனால் எம் ஆயுள் முடிவுற்ற பின் எம்மால் சேகரிக்கப்பட்ட கர்மத்தினால் நாம் நரகம் வரை இழுத்து செல்லப்படலாம். அவ்வாறில்லாவிடில் மிருக

லோகத்தில் பிறக்கச்செய்யவும் நாம் சேகரித்து கொண்ட கர்மம் துணை செய்யும்.

**பரிசோதனை குழாயினுள் தெரியாத விடயங்கள்.**

தர்மத்தினை பின்பற்றும் ஒருவரால் தான் இதனிலிருந்து மீள முடியும். அவ்வாறில்லாவிடில் அதனிலிருந்து ஒருவர் மீள்வது மிகவும் கடினமாகும். தன்னால் தன்னை பாதுகாத்து கொள்ளவிருக்கும் செயற்பாடே இந்த தர்மத்தில் உள்ளது.

அதனை விடாமுயற்சி, தைரியம், வீரியம்,மற்றும் தியாகத்துடனேயே செய்ய வேண்டும். அதனால் இந்த தர்மத்தினை பழக்கப்படுத்துவது மிக மிக கடினமானதாகும். புத்த பகவான் இந்த நரகத்தின் இயல்பினை முற்றாக உணர்ந்தார், முழுமையாக பார்த்தார் புத்த பகவான் நரகத்தினை கண்டது சாதாரண கண்களினால் அல்ல. பரிசோதனை குழாயினுள் அல்ல. பரிசோதனை குழாயிலோ அல்லது வேறுவிதமான பொருள்களினூடாகவோ இதனை யாராலும் காண முடியாது. புத்த பகவான் இதனை கண்ணுற்றது ‘சுதூ பபாத’ எனும் ஞானத்திலாகும்.

**எம் கண்களுக்கு தெரியாத விடயங்கள் தெரியும்**

நான்காம் படிமுறை தியானம் வரை தன் மனதை மேன்மைபடுத்திய புத்த பகவானால் உயிர்கள் மரணிப்பதனையும் மரணித்து மீண்டும் பிறப்பதனையும் காணக்கூடியதாக இருந்தது. ஒரு உயிர் மறைவதனை எம்மால் காண முடியுமா? முடியாது.

நாம் எவராவது ஒருவரது உடலிலிருந்து பஞ்ச உபாதானஸ்கந்தங்கள் வெளியேறுவதை கண்டிருக்கிறோமா? இல்லை. அப்படியாயின் எம்மால் ஒருவரது உயிர் பிரிவதனை காண முடியாது. அதேபோல் மீண்டும் ஒரு உயிர் பிறப்பதனையும் காண முடியாது. ஆனால் புத்த பகவான் உயிர்கள் மரணிப்பதனையும் மரணித்து பிறப்பதனையும் காணக்கூடிய ஞானத்தினை உடையவராக இருந்தார்.

## போவதும் வருவதும் தெரியும்

புத்த பகவான் இதனை இவ்வாறு தான் பார்த்தார். கதவுகள் திறந்தபடி இருவீடுகள் இருக்கின்றன. அவ்விரு வீடுகளையும் பார்த்த படி ஒருவர் அவ்வீடுகளுக்கு முன்னால் இருக்கிறார். அப்போது அவருக்கு தெரிகிறது. அந்த வீடுகளுக்கு மனிதர்கள் வருகிறார்கள், சிலர் வெளியேறுகிறார்கள். வெளியேறியவர்கள் மீண்டும் வீட்டினுள் செல்கிறார்கள். அவ்வாறு வீட்டினுள் செல்வோர் வீட்டினுள் நடமாடுகிறார்கள். அந்த வீட்டினிலிருந்து மீண்டும் அடுத்த வீட்டுக்குள் செல்கிறார்கள். அதனை போன்றதுதான் உயிர்களது வாழ்க்கையுமாகும்.

சில உயிர்கள் மனம், வாக்கு, காயம் என்பவற்றினால் நன்மையை செய்து நல்ல வாழ்வினை வாழ்கிறார்கள். அவர்கள் அந்தணர்கள், பிக்கு துறவிகளை தூற்றாது, தர்மத்தினை இகழாது, மூட நம்பிக்கைகள்* என்பன பின்பற்றாது வாழ்ந்து மரணிக்கின்றனர். அவர்கள் தான் மரணித்து சுவர்க்கத்தில் பிறப்பார்கள். அல்லது மீண்டும் மனித உலகத்தில் பிறவியெடுப்பார்கள்.

## இவை இருந்தால் மாத்திரம் தான்

அப்படியாயின் நீங்கள் மரணித்த பின் ஏன் மனித உலகில் மீண்டும் பிறந்தீர்கள்? உடலினால் நன்மையை செய்ததினால், வாக்கினால் நன்மையை செய்ததினால், மற்றும் மனத்தினாலும் நன்மையை செய்ததினாலேயே. பிக்கு துறவிகளை ஏளனப்படுத்தாததினால், தர்மத்தினை ஏளனப்படுத்தாதினால் மற்றும் மூட நம்பிக்கை அற்று இருந்ததினாலேயே ஆகும். அதேபோல் நீங்கள் மரணித்த பின் சுவர்க்கத்தினை அடைய வேண்டுமாயினும் உங்களிடம் இந்த தகுதிகள் இருக்க வேண்டும். உங்களிடம் இந்த இலட்சணங்கள் இருப்பின் 'நான் மரணித்த பின் சுவர்க்கத்தில் தான் பிறப்பேன்' என நினைத்து கொள்ளுங்கள்.

## இறுதி சடங்கினால் ஒருவர் சுவர்க்கத்தினை அடையமாட்டார்.

அப்படியாயின் ஒருவர் ஈமக்கிரியைகளினால் சுவர்க்கத்தினை அடையமாட்டார். நாம் ஏன் ஈமக்கிரியைகளை செய்கிறோம்? 'மரணித்தவர் துன்பமனுபவிக்கும் இடத்தில் பிறந்திருந்திருந்தால் அவர் அவ்விடத்திலிருந்து நீங்கி சுகம் அனுபவிக்க வேண்டும்' என்றல்லவா? அதனை எம்மால் செய்ய முடியுமா? முடியாது. அது அப்படி நடக்குமாயின் அதனை எமக்கு முதலில் அறியத்தருவது புத்த பகவானே ஆவார். ஏனெனில் அவர் மஹா கருணை படைத்தவர் ஆவார். ஒருவர் மரணித்த பின்னராவது சுவர்க்கத்தில் பிறந்து சுகம் அனுபவிக்க முடியுமாயின் அதனை புத்த பகவானே முதலில் கூறியிருப்பார்.

நேற்று ஒருவர் என்னிடம் வந்து கேட்டார். 'இறந்தவருக்கு அதிகமாக புண்ணியம் கிடைப்பது அவருடைய பிணத்தினை தகனம் செய்யும் போதா? அல்லது புதைக்கும் போதா?' என்று. நான் 'இறந்தவருக்கு அது தேவையில்லாத ஒரு விடயம். இறந்த பின்னர் அவரது பிணம் வாகனத்தில் நசுங்கினாலும் பிரச்சினை இல்லை' என்றேன். பிணங்களை பராமரிப்பதால் இறந்தவரை எவ்வாறு சுவர்க்கத்தில் பிறக்கச்செய்ய முடியும்? பிணத்தினை நாய்கள் இழுத்து சென்றாலும் பரவாயில்லை. முக்கியத்துவம் இருப்பது பிணத்திலல்ல. அவர் வாழ்ந்த வாழ்க்கையிலாகும்.

## உடம்பினால் செய்யும் பாவம்

புத்த பகவான் 'இவ்வுலகில் வாழும் உயிர்கள் உடலினால் மூன்று வகையான பாவங்களை செய்கின்றனர்'. என மொழிந்தார். அதன் முதலாவது தான் பாணாதிபாதா அதாவது உயிர்களை கொல்லுதலாகும். புத்த போதனைகளில் உயிர்களை கொல்வது தொடர்பாக பின்வறுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. **'லுத்தோ'** (கொடூர மிகுந்த) **'லோஹிதபாணி'** (இரத்ததிலான கரத்தினோடு) **'ஹதபஹதே நிவிட்டோ'** (அடித்து குத்தி கொல்லும் மனப்பான்மையோடு) **'அதயாபன்னோ சப்பபான பூதேசு'** (உயிர்கள் மீது எவ்வித காருண்யமுமற்று ஒருவர் உயிர்களை கொல்வாராயின் அது பாணாதிபாதா அதாவது உயிர் வதையாகும்).

**களவும் உடலினால் செய்யும் பாவமாகும்.**

அடுத்ததாக களவு தொடர்பாக விபரிக்கப்படுகிறது. ஊரிலாகட்டும் நகரத்திலாகட்டும் தனக்கு வழங்கப்படாதவற்றை திருடும் மனப்பான்மையில் ஒருவர் எடுப்பாராயின் அது திருட்டாகும். ஒருவரது தோட்டத்திலிருந்து பூக்கன்று ஒன்றினை உரியவரது அனுமதியின்றி எடுத்தாலும் அது திருட்டேயாகும். அதேபோல் இலஞ்சம் வாங்குதல், வஞ்சனை செய்தல் என்பனவும் களவாகும்.

அடுத்ததாக புத்த பகவான் தவறான காமசெயல் தொடர்பாக விபரிக்கிறார். தாயால், தந்தையால், பெற்றோரால், சகோதரனால், சகோதரியால், உறவினரால், கணவனால், மனைவியால், பாதுகாக்கப்படும் ஒருவரோடு எவராயினும் ஒருவர் காம செயலில் ஈடுபடுவாராயின் அது தவறான காம செயலாகும். இவை உடம்பினை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளும் பாவ செயல்களாகும்.

**பேசும் பாக்கியம் கிடைத்தது புறங்கூறுவதற்காக அல்ல.**

அடுத்ததாக புத்த பகவான் வார்த்தையினால் செய்யும் நான்கு வகையான பாவங்கள் தொடர்பாக குறிப்பிடுகிறார். முதலாவது பாவம் தான் பொய். எமக்கு பேசும் திறமை கிடைத்தது பொய்யுரைப்பதற்காக அல்ல. உலகிற்கு நன்மையை விளைவிப்பதற்காகவே. நீங்கள் பாம்புகளை கண்டிருப்பீர்கள். அவர்களது உலகில் வார்த்தைகள் இல்லை. அவர்கள் மனிதர்களாக பிறந்திருக்கும் போது பொய்யுரைத்ததினாலயே அந்த

துர்ப்பாக்கியம் கிட்டியது.

அடுத்தது தான் புறங்கூறல். நன்கு ஆராய்ந்து பாருங்கள். வீடுகளில் பிரச்சினை ஏற்பட புறங்கூறுதலே காரணமாகவிருக்கும். அநேகமாக சண்டை சச்சரவுகள், சந்தேகங்கள், குழப்பங்கள் என்பன ஏற்படவும் இதுவே காரணமாக அமைகிறது. புறங்கூறும் அனைவருமே வார்த்தையினால் பாவத்தினை தேடிக்கொள்கின்றனர். எமக்கு பேசும் திறமையிருப்பது புறங்கூறுவதற்காக அல்ல. நீங்கள் பேச முடியாதவர்களை பார்த்திருப்பீர்கள். அதேபோல் திக்கி பேசுவோர்களையும் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு பிறப்பதற்கு காரணம் அவர்கள் வார்த்தையினால் தேடிக்கொண்ட பாவங்களேயாகும்!

**அர்த்தமற்ற பேச்சுக்கள் வேண்டாம்.**

வார்த்தையினால் செய்யும் அடுத்த பாவம் தான் கொடிய சொற்களை பிரயோகித்தல். புறங்கூறுவதால் ஏற்படும் பிரச்சினைகளின் போது கொடிய (கெட்ட) வார்த்தைகளையே பிரயோகிக்கின்றனர்.

அடுத்தது தான் அர்த்தமற்ற பேச்சுக்கள். நடிகர்கள், விளையாட்டுக்கள், அரசியல்வாதிகள் தொடர்பான பேச்சுக்களை (32 வகையான பேச்சுக்கள் இதிலடங்கும்.) பேசிக்கொண்டிருத்தல். இவையனைத்தும் வார்த்தையினால் செய்யும் பாவங்களேயாகும்.

எமது கை கால்களிலே சக்தி இருக்கும் வரை எம்மால் இதனை விளங்கிக்கொள்ள முடியாது. என்றாவது ஒரு நாள் எமது உடல் சக்தியிழந்து, பலமற்று ஓரிடத்திற்கு வரையறுக்கப்பட்டதன் பின்னர் அதாவது

எமது இறுதி காலத்தில் எமக்கென்று நன்மை பயக்கும் ஒன்றுமே எஞ்சுவதில்லை. அன்றைய நாள் நாம் இதுவரை உடலினாலும், வாக்கினாலும், மனதினாலும் சேர்த்துக்கொண்டவையை பொதிசெய்து ‘இந்தா! நீ இதுவரை சேர்த்து கொண்டவையை அள்ளிக்கொண்டு போ!’ என்று எமக்கு தரப்படும். அவற்றை எடுத்து கொண்டுதான் நாம் செல்ல வேண்டியாதாக இருக்கும்.

### அப்படியானதொன்று எனக்கும் இருந்தால்.

அடுத்ததாக மனதினால் செய்யக்கூடிய மூன்று வகையான பாவங்கள் தொடர்பாக புத்த பகவான் மொழிந்தார். நாம் அழகிய ஒரு வீட்டினை கண்டதுமே ‘ஆ! எனக்கும் அந்த மாதிரியான வீடு ஒன்று இருந்தால்’ என தோன்றும். சொகுசான வாகனமொன்றினை கண்டாலும் ‘எனக்கும் இப்படிப்பட்ட வாகனமொன்று இருந்தால்’. என தோன்றும். அழகியதொரு சேலையை கண்டாலும் ‘அந்த மாதிரியான சேலை ஒன்று எனக்கிருந்தால்..’ என தோன்றும். அழகிய தோற்றமுடைய ஒருவரை கண்டாலும் ‘எனக்கு இவர் துணையாக அமைந்தால்..’ எனவும் தோன்றும். இவ்வாறு ஏனையோருக்கு உரித்தானவற்றை பார்த்து ஏங்கிக்கொண்டு பெருமூச்சு விட்டபடி வாழ்கிறோம். இவ்வாறான சம்பவங்கள் எம் வாழ்வில் இடம்பெற்றதில்லையா? கட்டாயமாக இவ்வாறான சம்பவங்கள் எம் வாழ்வில் நிகழ்ந்துள்ளன. அப்படியாயின் பாருங்கள், எமது வாழ்வானது தீமையான திசையை நோக்கியே திரும்பியுள்ளதல்லவா? இரும்பினிலே தோன்றும் துருவானது எவ்வாறு அந்த இரும்பையே அழிக்கிறதோ அவ்வாறே எம் வாழ்வினை

அழிக்கவல்ல தீய சக்திகளும் எம்முள்ளே தான் இருக்கின்றன.

மனதினால் செய்கின்ற இன்னுமொரு பாவத்தினை பற்றி புத்த பகவான் விளக்கியுள்ளார். நாம், 'இவர்கள் நாசமாகத்தான் போக வேண்டும். 'அழிய வேண்டும்' செய்யும் ஒரு காரியமும் சரிவரக்கூடாது.' இவ்வாறு நினைக்கும் சந்தர்ப்பங்கள் இல்லையா? இருக்கிறது. இவ்வாறாக நினைக்கும் ஒவ்வொரு நொடியிலும் மனதினால் பாவத்தினையே சேகரிக்கிறோம்.

## ஒவ்வொரு பிறப்பிலும் நான் உன்னை பழிவாங்குவேன்.

ஒரு சிலர் இருக்கின்றனர். அவர்கள் ஏனையோரின் புறங்கூறுதலை கேட்டு அல்லது வேறு ஏதாவது காரணத்தினால் பிரச்சினைகளை ஏற்படுத்திகொண்டு மனதினால் இவ்வாறு நினைப்பார்கள். 'நான் ஒவ்வாரு பிறப்பிலும் உன்னை விரட்டி விரட்டி பழிவாங்காமல் விட்டால் பார்த்துகொள்' என்று. அவ்வாறு மனதினால் மட்டும் நினைத்துவிடாது வார்த்தையினாலும் அதனை வெளிப்படுத்துகிறார்கள். அவ்வேளை அவர் மனதினால் மட்டுமல்லாது வார்த்ததையினாலும் பாவத்தை சேகரித்து கொள்கிறார்.

மனதினால் பாவம் சேரும் மிகவும் பயங்கரமான விடயம் தான் மூடநம்பிக்கை. அந்த மூடநம்பிக்கை தான். ஒருவர் 'தானம் அளிப்பதால் நல்விளைவுகள் ஏற்படும்' என்பதனை ஏற்றுகொள்ள மாட்டார். அதேபோல் 'சேவையின் (பிரதிபலன்கள்) விளைவுகள் உண்டு' என்பதனை ஏற்றுகொள்ளார். இங்கு சேவை

எனப்படுவது தனது தொழிலாகும். அந்த தொழிலை ஒருவர் சரிவரச்செய்வாராயின் அது மிகப்பெரிய புண்ணியமாகும். நாம் ஆசிரியர்களை எடுத்து கொண்டால் அந்த தொழிலினூடாக ஒருவர் மிகவும் புண்ணியத்தினை ஈட்டி கொள்ளக்கூடியதாக இருக்கும். வைத்திய தொழிலிலும் புண்ணியத்தினை சேகரித்து கொள்ளலாம். அலுவலக சேவகருக்கு கூட அப்படித்தான். வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியரை எடுத்து கொண்டாலும் அப்படித்தான் அவர்களும் அவர்களுடைய அந்த தொழிலை சரிவர செய்வதால் அளப்பரிய புண்ணித்தினை தத்தமது வாழ்விற்கு ஈட்டிக்கொள்ளலாம். அதேபோல் ஒரு வியாபாரி தன் வியாபாரத்தை வஞ்சனையின்றி செய்வாராயின் அதன் மூலம் அவர் மரணத்தின் பின்னர் சுவர்க்கத்தில் கூட பிறக்கும் அளவிற்கு புண்ணியத்தினை சேகரித்து கொள்ளலாம். 'சேவை செய்வதால் பாவம் புண்ணியம் எனும் விளைவுகள் கிடைக்கும்' என்பதனை ஒருவர் நம்ப வேண்டும். ஒருவர் இதனை நம்பாவிட்டால் அவர் மூட நம்பிக்கை கொண்டவராவார்.

## அனைத்து உலகங்களும் இங்கு இல்லை.

அரும்பாடுபட்டு தம்மை ஈன்றெடுத்து, வளர்த்தெடுத்த பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது அளவிட முடியாத அன்பினை கொண்டவர்கள் என்பதனை ஏற்காதோரும் எம்மத்தியில் வாழ்கின்றனர். அதேபோல் ஒருவர் பெற்றோர்களுக்கு சேவை செய்வதில் பாவ புண்ணிய விளைவுகள் உண்டு என ஏற்றுக்கொள்ள மாட்டார். இதுவும் ஒரு மூட நம்பிக்கையாகும்.

அடுத்த மூட நம்பிக்கை தாய் தந்தை அற்று பிறக்கும் பிறவிகள் (ஓபபாதிக பிறப்பு) உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ளாமை

## உலகம் என்பது நாம் காண்பவை மட்டுமல்ல.

அடுத்த மூட நம்பிக்கை தான் இவ்வுலகினை உய்த்தறிந்த துறவிகள் அந்தணர்கள் இல்லை. எனும் நிலைபாடு. சிலர் தம் கண்ணுக்கு தெரிபவை மட்டும் தான் உலகம் என நினைத்து கொண்டிருக்கிறார்கள். இந்த கருத்து சரியா? பிழையா? பிழையாகும்.

புத்த பகவானுக்கு இவ்வுலகில் சாதாரண கண்களுக்கு புலப்படாத பல விடயங்களை காணும் திறமையிருந்தது. புத்த பகவான் இவ்வாறு போதித்தார். இவ்வாறான மூட நம்பிக்கைகளை கொண்டிருக்கும் ஒருவர் புத்த பகவான் உட்பட்ட பிக்கு, துறவிகளை நிந்தனை செய்வார். மோட்சத்திற்கு வழிகாட்டும் உன்னதமான தர்மத்தினையும் நிந்தனை செய்வார். இவ்வாறு பலவகையாக நிந்தனைகள் செய்து அதன் விளைவாக நரகத்தில் பிறப்பார்.

## ஐயோ! அம்மா..தீச்சுவாலைகள் என்னை சுட்டெரிக்கின்றன!

புத்த பகவான் நரகத்தினை பற்றி விபரிக்கிறார்.

நரகத்தில் பிறப்பது ஓபபாதிக முறையிலாகும். ஒருவரின் இறுதி மூச்சு நிற்கும் போதே நரகத்தில் பிறவி கிடைக்கும். நரகத்தில் அவர் பிறந்ததுமே அவரை இயமனின் சேவகர்கள் வந்து பிடித்து கொள்வார்கள்.

இலங்கையில் நடந்த சம்பவொன்றை கூறுகின்றேன்.

ஒரு மகள் இருந்தாள். அவள் ஒரு ஆசிரியை. அவள் காணி பிரச்சினை ஒன்றினால் தன் தாயோடு பகைமை கொண்டிருந்தாள். அவள் அதன் காரணமாக தனது தாயை ஏசிக்கொண்டும் தூற்றிக்கொண்டும் பகைமை கொண்டிருந்தாள். இப்படி இருக்கும் போது அந்த மகளுக்கு புற்றுநோய் ஒன்று ஏற்பட்டது. “குணப்படுத்த முடியாது, இவரை வீட்டிற்கு அழைத்து செல்லுங்கள்”. என வைத்திர்கள் கூறிவிட்டார்கள். இவள் நன்கு வாழும் போது தனது தாயை வீட்டிற்கு கூட வர அனுமதிக்கவில்லை. ‘வீட்டிற்கு வந்தால் அடிதான் கிடைக்கும்’ என கூறியிருந்தாள். ஆனால் மகள் நோயால் துன்புறும்போது தாய்தான் பணிவிடை செய்தாள். இவ்வாறு இருக்கும் போது ஒருநாள் இந்த மகள் படுத்திருந்த கட்டிலில்ருந்து எழுந்து பலத்த சத்தத்தோடு ‘அம்மா வீடு எரிகிறது.. வீட்டினுள் தீ வருகிறது’ என கூச்சலிட்டாள். வீட்டினுள் வெயில் வருவதால் தான் இவ்வாறு கூச்சலிடுகிறாள் என்று, அந்த தாய் கதவினை மூடினாள். இவ்வாறு மூடும் போது ‘அம்மா, சிவப்பு நிற ஆடை அணிந்தோர் வந்து என்னை இழுக்கின்றனர்’ஆ!! என கத்திக்கொண்டே மரணித்தாள். மரணத்தருவாயில் இருக்கும் சிலருக்கு மனித உலகில் இருக்கும் போதே நரகத்தில் பிறப்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

### எமக்கும் அப்படிப்பட்ட மரணம் நிகழ்ந்தால்..?

ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வாறில்லை. நல்ல சுகமாக வயிறு முட்ட சாப்பிட்டு உறங்குவார்கள். அந்த உறக்கத்திலேயே அவர் மரணிப்பார். இதை

கேள்வியுறும் மக்களும் மரண சடங்கில் வருணித்து பேசுவார்கள். 'நல்ல மரணம் ஒன்று. சுகமாகவே அவர் இறந்தார். எவ்வித வேதனையையும் அனுபவிக்கவில்லை. அதிஷ்டமானதொரு மரணம்' என்று வருணிப்பார்கள். ஆனால் அவர் மரணத்தின் பின் பிறப்பது எங்கே நரகத்தில் தான். அவர் அங்கு பிறந்த உடனே அவரை இயம சேவகர்கள் பிடித்து கொள்வார்கள். இதனிலிருந்து புலப்படுவது என்னவெனில் அவருக்கு அதிலிருந்து மீள்வதற்கு எவ்வித அவகாசமும் கிடையாது என்பதாகும்.

**இயம அரசன்..**

இவ்வளவு ஏன்? நாம் ஒரு சிறிய விடயத்தினை பார்போம். நாம் கனவு ஒன்றினை காண்கிறோம் என்று வைத்துகொள்வோம். அந்த கனவினை காணும் போது எம்மால் அதனை தடுத்து நிறுத்த முடியுமா? முடியாது. நாம் விரும்பாத ஒன்றை கனவில் காண்கிறோம். ஆனால் அதனை எம்மால் அந்நேரம் நிறுத்த முடியாது. அந்த கனவினை நாம் தொடர்ந்தும் காண்கிறோம். ஆம் நாம் விரும்பாவிட்டாலும் அதனை காண வேண்டியதாக இருக்கிறது. பாருங்கள் எவ்வளவு அநாத்மம் (எம்மால் கட்டுப்படுத்த முடியாத தன்மை) என்று.

ஒருவர் நரகத்தில் ஓபபாதிக முறையில் பிறந்தவுடனே இயமனின் சேவகர்களால் அவர் இழுத்து செல்லப்டுகிறார். அவ்வாறு இழுத்து செல்லப்படும் போது அவர் செய்த அனைத்து பாவங்களும் அவர் முன்னே தென்படும். அவரை இயமனின் சேவகர்கள் இயம அரசனின் முன் நிறுத்துவர். புத்த பகவான் 'புண்ணியமிகு

பிக்குக்களே! நரகத்தில் பிறந்த ஒருவரிடம் இயமன் கேள்விகள் கேட்பார்' என மொழிந்தார்.

இயமன் நரகில் பிறந்த அவ்வுயிரிடம் பின்வருமாறு கேள்விகளை கேட்பார். 'நீ மனித உலகில் வாழும் போது முதலாவது தேவதூதனை காணவில்லையா?'

'ஐயோ நான் காணவில்லையே!'

'என்ன? நீ மனித உலகில், தன்னுடைய மலம் மற்றும் சிறுநீரினை உடலில் பூசிக்கொண்டபடி பிரண்டிருக்கும் அக்கணம் பிறந்த குழந்தைகளை கண்டதில்லையா?'

'பிரபுவே! நான் கண்டிருக்கிருக்கிறேன்.'

'அப்படியாயின் உனக்கு "நானும் இவ்வாறு தான் பிறந்தேன். மீண்டும் மீண்டும் பிறக்கும் இயல்பினை உடையவனாகவே நான் இருக்கிறேன். நான் மீண்டும் மீண்டும் பிறப்பதால் நான் செய்யும் தவறான செயல்களை விடுத்து தர்மத்தில் ஈடுபட வேண்டும். என நீ நினைக்கவில்லையா?'

நரகத்தில் பிறந்த இவ்வுயிர்க்கு தான் செய்த அத்தனை தவறுகளும் கண் முன்னே தெரியும். அதனால் பொய்யுரைக்கவும் முடியாது. அதனால் நரகத்தில் பிறந்தவர் பின்வருமாறு கூறுவார். 'ஐயோ பிரபுவே! என்னால் தர்மத்தில் ஈடுபட முடியாமல் போய் விட்டது. நான் தாமதமாகிவிட்டேன்'

அப்போது இயமதர்ம அரசன் 'உனக்கு நன்மையான செயல்களை செய்ய முடியாமல் போய் விட்டது. நீ தாமதமாகிவிட்டாய்! செய்வதற்கு வேறு வழியில்லை.

இந்த கர்மம் உன்னாலேயே செய்யப்பட்டது. இந்த கர்மம் உன் தந்தையால் செய்யப்படவில்லை. தாயால் செய்யப்படவில்லை. உறவினரால் செய்யப்படவில்லை. உன் சகோதரனால் செய்யப்படவில்லை. உன் சகோதரியால் செய்யப்படவில்லை. உன் நண்பர்களால் செய்யப்படவில்லை. வேறு ஒரு தேவனால் செய்யப்படவில்லை. துறவியால் செய்யப்படவில்லை. அந்தணரால் செய்யப்படவில்லை. நீயே இந்த கர்மத்தினை சேகரித்துகொண்டாய். அதனால் அதன் தீய விளைவுகளையும் நீயே அனுபவிக்க வேண்டும்.' என்று கூறுவார்.

## தாத்தாக்களை பாட்டிகளை கண்டதில்லையா?

அடுத்ததாக இயம அரசன் இரண்டாவது கேள்வியை கேட்பார்.

'மானுடனே! நீ இரண்டாவது தேவதூதனை கண்டதில்லையா?'

'சுவாமி நான் கண்டதில்லையே!'

'ஏன் நீ கண்டதில்லையா? 80-90 வயது கொண்ட நன்கு முதிர்ந்த, ஊன்றுகோலை ஊனிச்செல்லும் முதியோரை நீ கண்டதில்லையா? முடி நரைத்து, பற்கள் விழுந்து, தோல் சுருங்கி, கூன் விழுந்திருக்கும் முதியோரை நீ கண்டதில்லையா?'

'பிரபுவே! நான் கண்டிருக்கிறேன்'

'அப்படியாயின் நீ நினைக்கவில்லையா? நானும் இவ்வாறு முதிர்ச்சியடைவேன். நானும் பலவீனமடைவேன்,

என்னுடைய இந்த கை கால்கள் தளர்ந்து போகும். அதனால் நான் இவ்வாறாக முதிர்ச்சி அடைவதற்கு முதல் எப்படியாவது அதர்மத்திலிருந்து விலகி நன்மையை செய்ய வேண்டும். என்று நீ நினைக்கவில்லையா?'

'ஐயோ பிரபுவே! என்னால் தர்மத்தில் ஈடுபட முடியாமல் போய் விட்டது. நான் தாமதித்துவிட்டேன்'

'தாமதமாகியதற்கு என்னால் ஒன்றும் செய்ய முடியாது. இந்த கர்மம் உன்னாலேயே செய்யப்பட்டது. இந்த கர்மம் உன் தந்தையால் செய்யப்படவில்லை. தாயால் செய்யப்படவில்லை. உறவினரால் செய்யப்படவில்லை. உன் சகோதரனால் செய்யப்படவில்லை. உன் சகோதரியால் செய்யப்படவில்லை. உன் நண்பர்களால் செய்யப்படவில்லை. வேறு ஒரு தேவனால் செய்யப்படவில்லை. துறவியால் செய்யப்படவில்லை. அந்தணரால் செய்யப்படவில்லை. நீயே இந்த கர்மத்தினை சேகரித்துகொண்டாய். அதனால் அதன் தீய விளைவுகளையும் நீயே அனுபவிக்க வேண்டும்.' என்று இயம அரசன் பதிலுரைப்பார்.

புத்த பகவான் அடுத்ததாக 'இவ்வாறு நரகத்தில் பிறந்த மனிதரிடம் இயம அரசன் மூன்றாவது கேள்வியையும் கேட்பார்' என மொழிந்தார்.

'மானுடனே! நீ மனித உலகில் இருக்கும் போது மூன்றாவது தேவதூதனை காணவில்லையா?'

'ஐயோ! சுவாமி நான் கண்டதில்லையே!'

என்ன? நீ நோயாளிகளை கண்டதில்லையா?

தன்னுடைய மலக்கழிவுகளிலேயே படுத்திருக்கும் நோயாளிகளை நீ கண்டதில்லையா? ஏனையோரின் உதவியின்றி எழ முடியாத, உணவு உண்ண முடியாத, நீராட முடியாத நோயாளிகளை நீ கண்டதில்லையா?

'பிரபுவே! நான் கண்டிருக்கிறேன்'

நீ கண்டவுடன் சிந்தித்திருக்க வேண்டுமல்லவா? 'நானும் நோயுறும் இயல்பினை கொண்டவன் நானும் இவ்வாறு ஒரு நாள் நோயால் பீடிக்கப்படலாம். அதனால் நான் செய்யும் தவறான செயல்களை தவிர்க்க வேண்டும். நானும் தர்மத்தின் படி வாழ வேண்டும்.' என்று.

'ஐயோ பிரபுவே! நான் தாமதம் செய்துவிட்டேன்.'

அப்போது இயம அரசன் 'தர்மத்தினை பின்பற்ற தாமதமாகியவருக்கு தீமையான விளைவுகளை அனுபவித்தேயாக வேண்டும். இந்த கர்மம் உன்னாலேயே செய்யப்பட்டது. இந்த கர்மம் உன் தந்தையால் செய்யப்படவில்லை. தாயால் செய்யப்படவில்லை. உறவினரால் செய்யப்படவில்லை. உன் சகோதரனால் செய்யப்படவில்லை. உன் சகோதரியால் செய்யப்படவில்லை. உன் நண்பர்களால் செய்யப்படவில்லை. வேறு ஒரு தேவனால் செய்யப்படவில்லை. துறவியால் செய்யப்படவில்லை. அந்தணரால் செய்யப்படவில்லை. நீயே இந்த கர்மத்தினை சேகரித்துகொண்டாய். அதனால் அதன் தீய விளைவுகளையும் நீயே அனுபவிக்க வேண்டும்' என்று பதிலுரைப்பார். பாருங்கள். இயம அரசர் எவ்வாறு அவர் செய்த தீய கர்மத்தினை ஒப்புவிக்கிறார்

என்று. மனித உலகில் என்றால் நாம் தவறொன்றினை செய்து ஏனையோர் மீது ‘அவர் தான் இதனை செய்தார்’ என குற்றத்தை சுமத்தி தப்பித்துவிடலாம். ஆனால் தனது மனசாட்சியிலிருந்து தப்பிக்கமுடியாது. அப்படியாயின் நரகத்தில் சென்று செயற்படுவது மனசாட்சியை அடிப்படையாக கொண்டேயாகும் என்பதனை உணரலாம்.

## தண்டனை அனுபவிப்பதை பார்த்ததில்லையா?

பாருங்கள் புண்ணியவர்களே! இயமதர்ம அரசன் எனக்கூறப்படுபவர் ஒருவர் நரகத்தில் பிறந்ததுமே தண்டனையை வழங்குவதில்லை. இயமதர்ம அரசன் மீண்டும் நரகத்தில் பிறந்த மானுடரை பார்த்து கேட்கிறார். ‘மானுடனே! நான்காவது தேவதூதனை நீ காணவில்லையா?’ என்று.

‘ஐயோ சுவாமியே நான் கண்டதில்லையே!’

‘ஏன் நீ தண்டனை அனுபவிக்கும் மனிதர்களை கண்டதில்லையா? தவறுகளை செய்து அதன் விளைவாக சாட்டையடி வாங்கும் மக்கள், கல்லடிபட்டு இறந்து போகும் மக்கள், கைகால் வெட்டப்படும் மக்கள், சிறையிலடைக்கப்படுவோர், பல்வேறு வகையாக இம்சித்து உயிருடன் எரிக்கும் மக்களை நீ கண்டதில்லையா?’ என்று இயம அரசன் கேட்பார்.

நாம் வாழும் மனித உலகில் மனிதர்களை சித்திரவதை செய்வதை நாம் கடந்த காலங்களில் கேட்டிருக்கிறோம். கண்களினால் பார்த்தோர்களும் உள்ளனர். ஒருவரை நிலத்தில் சரிய வைத்து ஒரு காதில் ஆணியை

அடுத்த காதில் வெளிவறுமாறு சுத்தியலால் அடித்தல். மண்டையோடு சிதரும் வண்ணம் ஆணியை கொண்டு சுத்தியலால் அடித்தல். போன்றவை அவற்றில் ஒரு சிலதான். மனித உலகில் சித்திரவதைகள் இப்படியென்றால் நரகலோகத்தில் எவ்வாறானதாக இருக்கும்?

இயம அரசன் இந்த சித்திரவதைகளை விளக்கி கேட்கிறார்.

“உனக்கு இந்த தண்டனைகளை பார்த்து ‘இந்த பிழைகளில் இருந்து நான் மீள வேண்டும்’ என்று தோன்றவில்லையா?”

‘ஐயோ சுவாமியே எனக்கு இவ்வாறு தோன்றவில்லையே!’

அப்போது இயம அரசன் ‘தர்மத்தினை பின்பற்ற தாமதமாகியவருக்கு தீமையான விளைவுகளை அனுபவித்தேயாக வேண்டும். இந்த கர்மம் உன்னாலேயே செய்யப்பட்டது. இந்த கர்மம் உன் தந்தையால் செய்யப்படவில்லை. தாயால் செய்யப்படவில்லை. உறவினரால் செய்யப்படவில்லை. உன் சகோதரனால் செய்யப்படவில்லை. உன் சகோதரியால் செய்யப்படவில்லை. உன் நண்பர்களால் செய்யப்படவில்லை. வேறு ஒரு தேவனால் செய்யப்படவில்லை. துறவியால் செய்யப்படவில்லை. அந்தணரால் செய்யப்படவில்லை. நீயே இந்த கர்மத்தினை சேகரித்துகொண்டாய். அதனால் அதன் தீய விளைவுகளையும் நீயே அனுபவிக்க வேண்டும்.’ என்று கூறினார்.

## போதுஜ்ஜனரின் வாழ்கையானது ஒரு நீர் குவளையை போன்றதாகும்.

புத்த பகவானது ஒரு போதனை இருக்கிறது போதுஜ்ஜனர் தொடர்பாக. அந்த போதனையில் புத்த பகவான் போதுஜ்ஜனரரின் குணவியல்பினை ஒரு நீர் குவளைக்கு உவமித்து கூறுகிறார். அதேபோல் ஆர்ய (உன்னத) தர்மத்தினை பின்பற்றும் மோட்ச பாதையில் பயணிக்கும் ஆர்ய சீடனின் வாழ்வினை ஒரு நதிக்கும் உவமித்து கூறியுள்ளார். புத்த பகவான் தம் சீடர்களிடம் 'புண்ணியமிகு பிக்குக்களே! ஒரேயளவிலான இரு உப்பு கற்களை எடுத்து ஒன்றினை நீர்க்குவளைக்கும் மற்றதை கங்கைக்கும் இட்டால் ஏற்படும் மாற்றம் என்ன? என வினவுகிறார். அதற்கு பிக்குமார்கள் 'பாக்கியமுள்ள பகவானே! உப்புகல் இடப்பட்ட நீர்க்குவளையின் நீரானது விரைவிலேயே உப்பு சுவையுள்ளதாக மாறும். ஆனால் கங்கையின் நீரில் அதனால் மாற்றமேதும் ஏற்படுவதில்லை.' என மறுமொழி தெரிவித்தனர்.

அதனை செவிமடுத்த புத்த பகவான் 'இப்படித்தான் ஒரு சிறு பாவத்தை செய்த போதுஜ்ஜனருக்கு நரகத்தில் பிறக்க அதுவே காரணமாகிறது. ஆனால் மோட்சத்தினை சாட்ஷாத் (உறுதி) செய்துள்ள ஒரு ஆரிய சீடனுக்கு அது பாதிப்பு செலுத்தாது. பாருங்கள் தர்மத்தின் படி தம் வாழ்வினை நடத்தும் ஒருவருக்கு கர்ம விளைவுகளில் இருந்து எவ்வளவு பாதுகாப்பு கிடைக்கின்றது என்பதனை.

## பிணங்களை கண்டதில்லையா?

அடுத்ததாக இயம அரசன் ஐந்தாவது தேவதூதனை

பற்றி கேட்கிறார்.

'மானுடனே! நீ மனித உலகில் வாழும் போது ஐந்தாவது தேவதூதனை காணவில்லையா?'

'ஐயகோ! நான் கண்டதில்லையே!'

'ஏன் நீ மனிதர்கள் இறந்து கிடப்பதை கண்டதில்லையா? அழுகிய பிணங்களை கண்டதில்லையா?'

'பிரபுவே! நான் கண்டிருக்கிறேன்'

அதனை பார்த்ததும் 'நானும் ஒருநாள் இப்படி மரணிப்பேன் அல்லவா? அவ்வாறு மரணிப்பதற்கு முன்பு நான் பாவசெயல்களிலிருந்து தவிர்த்து தர்மத்தின் படி வாழ வேண்டும். புண்ணியங்களை செய்ய வேண்டும். என்று ஏன் நீ நினைக்கவில்லை?'

'ஐயோ! பிரபுவே என்னால் அவ்வாறு சிந்திக்க முடியாமல் போய்விட்டது. நான் தாமதித்துவிட்டேன்.'

'அப்படியாயின் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. தர்மத்தில் ஈடுபட தாமதித்தவனுக்கு எந்த துன்பத்தை அனுபவிக்க நேரிடுமோ அதை நீ இப்போது அனுபவித்தேயாக வேண்டும். இந்த கர்மம் உன்னாலேயே செய்யப்பட்டது. இந்த கர்மம் உன் தந்தையால் செய்யப்படவில்லை. தாயால் செய்யப்படவில்லை. உறவினரால் செய்யப்படவில்லை. உன் சகோதரனால் செய்யப்படவில்லை. உன் சகோதரியால் செய்யப்படவில்லை. உன் நண்பர்களால் செய்யப்படவில்லை. வேறு ஒரு தேவனால் செய்யப்படவில்லை. துறவியால் செய்யப்படவில்லை.

அந்தணரால் செய்யப்படவில்லை. நீயே இந்த கர்மத்தினை சேகரித்துகொண்டாய். அதனால் அதன் தீய விளைவுகளையும் நீயே அனுபவிக்க வேண்டும். என்று.

இயம அரசர் அமைதியாகிவிடுவார். இவ்வாறு ஐந்து வகையாக அவர் தர்மத்தில் ஈடுபட தாமதமாகியதை சுட்டிக்காட்டிய பின்பே அவர் மௌனமாகுவார். எந்த விதத்திலாவது அந்த மானுடனை அவரால் காப்பாற்ற முடியுமாயின் அவர் இந்த துன்பத்திலிருந்து பாதுகாப்பார்.

**அநித்தியத்தை நினைவுகூர்ந்ததால் தப்பினார்.**

நரகத்திற்கு சென்று இயம அரசரிடமிருந்து தப்பி வந்த ஒருவர் இருக்கிறார். இவர் இப்போது பிக்குவாக துறவு பூண்டிருக்கிறார். இந்த பிக்குவுக்கு நரகத்தில் நடந்தவை நினைவில் இருக்கிறது. அவர் மனித உலகில் வாழும் போது அநித்திய தியானத்தை செய்துள்ளார். இயம அரசன் இவ்வாறு ஐந்து கேள்விகளையும் கேட்டு இறுதியாக ஏன் நீ இவ்வாறு செய்தாய் என கேட்டுள்ளார். ‘சுவாமியே நான் துறவு பூணுவதற்காகத்தான் இருந்தேன். அதற்கிடையில் மரணித்து விட்டேன்’ என பதிலளித்துள்ளார். இவர் நரகத்தின் வாசல் வரை சென்று தப்பியவராவார். தப்பிக்க காரணம் தான் அநித்திய தியானத்தை செய்திருத்தல். இயம அரசர் ‘உனக்கு நீ செய்த புண்ணியம் ஒன்று உள்ளது. இந்த புண்ணியத்தினால் நீ மீண்டும் மனித உலகில் பிறக்கலாம்’. என்று கூறவும் அங்கிருந்த இன்னுமொருவர் ‘நீ மனித உலகில்

பிறந்தாலும் அந்த மனித வாழ்வின் அரைவாசி காலத்தில் நீ மிகுந்த துன்பத்தினையே அனுபவிப்பாய்!' எனக்கூறியுள்ளார்.

## வாழ்வின் அரைவாசி மிகவும் துன்பகரமானதே!

அந்த பிக்கு, 'நான் வாழ்வின் அரைவாசியே துன்பத்தினை தான் அனுபவிப்பேன்'. என கூறியது மாரனே* என கூறுகின்றார். இவர் நரகத்திலிருந்து நீங்கி மனித உலகில் மிக மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை தினசரி குடிபோதையில் தாயை துன்புறுத்துவாராம். இந்த பிக்குவை பாடசாலைக்கு கூட அனுப்புவதில்லை. ஒன்பது வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறி ஒரு தொழிலை தேட ஆரம்பித்தார். அதன் விளைவாக இவருக்கு பாண் பேக்கரி ஒன்றில் அடுப்பிற்கு விறகு போடும் தொழில் கிடைத்தது. அதனால் இவர் நெருப்பினால் மிகுந்த துன்பம் அனுபவித்துள்ளார். இவரின் சிறு வயதில் இருந்தே நரகத்தில் இடம்பெற்ற சம்பவம் இவருக்கு அடிக்கடி ஞாபகம் வந்துள்ளது. அதேபோல் சிறுவயதிலிருந்தே அவருக்கு துறவு பூண வேண்டும் எனும் ஆசை இருந்தாலும் எவருமே அவரை துறவு பூணுவதற்காக ஏற்றுக்கொள்ளவில்லை. நாற்பது வயது வரை பெரும் துன்பத்தினை அனுபவித்து வாழ்ந்து தனது நாற்பதாவது வயதினில் பிக்கு துறவறம் பூண்டார். வாழ்வின் அரைவாசி காலத்தினையே துன்பத்தினையே அவர் அனுபவித்தார். இறுதியில் அவர் துறவு பூண்டாலும் நரகத்தில் இடம்பெற்ற சம்பவம் நினைவிற்கு வருவதினால் அவரால் மனதினை ஒருங்கிணைத்து

தியானம் செய்தல், தர்மத்தினை ஆராய்தல் போன்ற செயற்பாடுகளை செய்வது கடினமாக இருக்கிறது. என அவர் கூறியுள்ளார். இருப்பினும் அவர் அதிகமாக புண்ணியங்களை செய்கிறார். அதனால் அவர் மரணத்தின் பின் சுவர்க்கத்தில் பிறப்பார்.

## நூற்றிற்கு தொன்னூற்றொன்பது வீதம் நரகத்தில் தான்.

இலங்கையில் வாழும் எத்தனை பேர் மரணித்து சுவர்க்கத்தில் பிறப்பார்கள் என நினைக்கிறீர்கள்? நூற்றிற்கு ஒரு தசம் என்ற வீதத்திலேயே சுவர்க்கத்தில் பிறப்பார்கள். மீதி தொன்னூற்றொன்பது தசம் ஒன்பது வீதமானோர் நரகத்திலோ, மிருகலோகத்திலோ, அல்லது பிரேத (பிசாசு) உலகத்திலோ பிறப்பார்கள். காரணம் என்ன? மூட நம்பிக்கைகளில் மூழ்கி இருப்பதாகும். தானமும் அளிப்பார்கள், சீலத்தினையும் அனுஷ்டிப்பார்கள். ஆனால் ஜாதகத்தை சரணடைந்து மூட நம்பிக்கைகளில் திளைத்துள்ளனர். புத்த பகவான் ‘மூட நம்பிக்கைகளை கொண்டு வாழ்பவனுக்கு இருவகையான பிறப்புக்களே உள்ளது. ஒன்று மிருகலோக பிறப்பு இரண்டாவது நரகத்தில் பிறப்பது’ என மொழிந்தார். சம்மா திட்டி (தெளிவான பார்வை) அற்று மூட நம்பிக்கைகளை சரணடைபவர்கள் நரகத்திலேயே பிறப்பார்கள். இறப்போர் அனைவரும் நரகத்தில் பிறப்பதற்கான இரகசியம் இதுவேயாகும்.

## துணிவு வேண்டும்.

நன்றாக சிந்தித்து பாருங்கள். இந்த நம்பிக்கைகளை விடுத்து மும்மணிகளை மாத்திரம் சரணடைவதற்கு

ஒருவருக்கு துணிவு வேண்டும். ஒருவருக்கு இம்மாதிரியான நம்பிக்கைகளை விடுத்து புத்த பகவானை சரணடைவதற்கு பெரும் போராட்டம் தன்னோடு தனக்கே செய்ய வேண்டியதாக இருக்கும். ஏனெனில் இவ்வளவு நாள் தான் நம்பிக்கொண்டிருந்தவையே கைவிட வேண்டும். ஒருவர் இவற்றை கைவிட்டு மும்மணிகளை சரணடைவாராயின் அவருக்குதான் பாதுகாப்பு கிடைக்கிறது. மும்மணிகளை கைவிட்டு ஒருவர் வேறு விடயங்களை சரணடைவாராயின் அது அவருக்கு துர்ப்பாக்கியத்திற்கே வழி காட்டும். அதனால் தான் இலங்கையில் வாழும் பெரும்பாலானோர் மரணத்தின் பின்னர் நரகத்தில் பிறக்கின்றனர்.

## பழுக்கக்காய்ச்சிய இரும்பு

முன்பு கூறியதை போல் இயம அரசன் மௌனமாகியதன் பின்னர் நரக வாசிகள் இந்த மனிதரை அவ்விடத்தினை விடுத்து இழுத்து செல்வார்கள். இழுத்து சென்று தீயிலிடப்பட்ட பழுக்கக்காய்ச்சிய இரும்புக்கோலினால் இடது கையை குத்துவார்கள் வலது கைக்கும் கால்களிரண்டிற்கும் மார்பிற்பும் குத்துவார்கள். ஆனால் அந்த கர்ம வினையை அனுபவித்து தீரும் வரை துடித்து கொண்டிருப்பாரே அன்றி அதில் மரணிக்கமாட்டார்.

## இவற்றை கேட்கும் போதே பயமாக இருக்கிறது.

அடுத்ததாக, இந்த மனிதனை அவ்விடத்திலிருந்து பிடுங்கி எடுப்பார்கள். எடுத்து கோடரி ஒன்றினால் கைகளையும் கால்களையும் வெட்டுவார்கள். இவ்வாறு கைகால்கள் துண்டித்தாலும் வேதனையால் அவர்

துடிப்பாரே தவிர மரணிக்கமாட்டார். சற்று நேரத்தில் மீண்டும் இந்த கைகால்கள் தாமாகவே அவரது உடம்பில் இணைந்து கொள்ளும். அவரை நரகவாசி ஒருவர் மட்டும் துன்புறுத்துவதில்லை. பலர் ஒன்றாக சேர்ந்து தான் துன்புறுத்துவார்கள். அதன் பின்னர் இந்த மனிதரை (நரகத்தில் பிறந்த நரக உயிரினை) நன்கு சூடாகிய இரும்பு தரையில் இழுத்து செல்வார்கள். இழுத்து சென்று அந்த தரையின் மீது இவரை படுக்கச்செய்து வெப்பமிகுந்த சில்லுக்களையுடைய வாகனங்களில் ஏறிய வண்ணம் நரகவாசிகள் இவரின் உடலின் மேல் பயணிப்பார்கள். நரகத்தில் பிறந்த மானுடன் வேதனையால் துடித்துக் கொண்டும் கத்திக்கொண்டும் இருப்பார். ஆனால் மரணிக்கமாட்டார். அதன்பின்னர் இந்த மனிதரை அடுப்புக்கரி போன்று அதனை விட பெரிய தீக்கட்டிகள் இருக்கும் ஒரு மலையின் மீது அடித்து துன்புறுத்திய வண்ணம் ஏறச்செய்வார்கள். இவ்வாறு ஏற்றி முடித்த பின்னர் அந்த மலை உச்சியிலிருந்து அவரை ஒரு குழிக்குள் தள்ளி விடுவார்கள். அது 'லோகும்பு நரகம்' எனப்படும். இந்த குழியில் கொதித்துகொண்டிருக்கும் இரும்புதிரவம் நிரம்பியிருக்கும்.

### உணவு வகைகள் கொதிப்பது போல் எம் உடம்பும் கொதிக்கும்.

புத்த பகவான், உயிர்கள் இந்த கொதிக்கின்ற உலோக திரவ குழியில் அனுபவிக்கும் துன்பத்தினை விளக்கி கூறியுள்ளார். நரகத்தில் பிறந்த அந்த மனிதர் இந்த குழியில் விழுந்ததன் பின்னர் அவரின் உடல் நுரையை போலாகிவிடும். அந்த குழியின் ஆழத்தில் அமிழ்ந்து

கொண்டும் மீண்டும் மேற்பரப்பின் மீது படர்ந்து கொண்டும் அவர் ஆயிரக்கணக்கான வருடங்கள் அதில் அவிந்து கொண்டிருப்பார். அதற்கான கர்மவினை முடியும் வரை அவர் அதிலே வார்த்தையால் விபரித்து கூற முடியாத வண்ணம் துயரத்தை அனுபவிப்பார். இந்த நரகத்தின் துன்பமனுபவிக்கும் காலம் முடிந்த பின்னர் நரகவாசிகள் அவரை பெருந்தூண்டில்களினால் பிடித்து மண்டபம் போன்று அமைந்த ஓரிடத்திற்கு வீசுவார்கள். 'மகா நரகம்' என்பது அதன் பெயராகும். புத்த பகவான் அதனை மேழும் விபரிக்கிறார். 'இதன் மேல் பாகம் கீழ் பாகம், இடது புறம், வலது புறம், முன்பின் எனும் ஆறு பக்கங்களும் இரும்பினால் செய்து மூடப்பட்டதாகும். அதன் நாற்புறமும் தீ கொழுந்து விட்டு எரிகிறது. இது சிறியதொரு இடமல்ல. மிக மிக பெரியதாகும். இதனுள் இந்த மனிதர் மட்டுமல்ல கோடிக்கணக்கான பேர் துன்பமனுபவிக்கிறார்கள். அவ்வாறு மகா நரகத்துள் தூக்கி வீசப்பட்டோருக்கு தூரத்தே ஒரு கதவு திறப்பது தென்படும். அப்போது அதனுள் இருக்கும் அனைவரும் அந்தக்கதவினூடாக வெளியேறிவிடலாம் எனும் நம்பிக்கையோடு அந்த திசையை நோக்கி ஓடுவார்கள். அந்தக்கதவினை நெருங்கும் போது அந்த கதவினூ டாக கொழுந்து விட்டு எரிகிற நெருப்பு உள்ளே வரும். அந்த நெருப்பினால் தோல் எரிந்து, தசை எரிந்து, எழும்புகளிலிருந்து புகை வெளிவரும்'. என புத்த பகவான் மொழிந்துள்ளார். இவ்வாறு துன்பத்தினை அனுபவித்து கொண்டு அக்கதவினை அடையும் போது அக்கதவு மூடப்படும்.

**கர்மம் தீரும் வரை மரணிக்கமாட்டார்கள்.**

அந்த கதவு மூடப்படும் போதே இன்னுமொரு கதவு திறக்கும். மீண்டும் அவர்கள் இங்கிருந்து கதவு திறப்பட்ட திசையை நோக்கி ஓடுவார்கள். தாங்க முடியாத வேதனையால் கத்திக்கொண்டு அக்கதவினை நோக்கி செல்லும் போது முன்பு கூறியது போன்றே அந்த கதவினூடாக கொழுந்து விட்டு எரிகிற நெருப்பு உள்ளே வரும். அந்த நெருப்பினால் தோல் எரிந்து தசை எரிந்து, எழும்புகளிலிருந்து புகை வெளிவரும். என புத்த பகவான் மொழிந்துள்ளார். இவ்வாறு துன்பத்தினை அனுபவித்து கொண்டு அக்கதவினை அடையும் போது அக்கதவு மூடப்படும்.

நாம் நினைப்போம் கிழக்கு திசை கதவுதான் இப்போது மூடப்பட்டதென்று. அடுத்ததாக மேற்கு திசையில் அமைந்த கதவு திறக்கப்படும். அத்திசையை நோக்கி ஓடும் போதும் அந்த கதவினூடாக கொழுந்து விட்டு எரிகிற நெருப்பு உள்ளே வரும். அந்த நெருப்பினால் தோல் எரிந்து தசை எரிந்து, எழும்புகளிலிருந்து புகை வெளிவரும். என புத்த பகவான் மொழிந்துள்ளார். இவ்வாறு துன்பத்தினை அனுபவித்து கொண்டு அக்கதவினை அடையும் போது அக்கதவும் மூடப்படும். அங்கிருந்து திரும்பி பார்க்கும் போது தென் திசையில் ஒரு கதவு திறப்பது தென்படும் அந்தத்திசையை நோக்கி ஓடும் போது முன்பு குறிப்பிட்து போன்றே அக்கதவும் மூடப்படும். அங்கிருந்து பார்க்கும் போது வடக்கு திசையில் கதவு திறப்பதனை காண்பார்கள். மீண்டும் அத்திசையை நோக்கி ஓடுவார்கள்.

## ஆயிரக்கணக்கான வருடங்களாக துன்பமே!

இங்கு கூறப்படம் ஒரு கதவினை அடைவதற்கு பல்லாயிரக்கணக்கான வருடங்களாகும். இவ்வாறு அந்த நரகத்தில் அனுபவிக்கும் காலம் முடிவடைந்து வரும் போது கிழக்கு திசையின் கதவு திறப்பதனை காண்பார்கள். மீண்டும் அத்திசையை நோக்கி தீயினால் எரிந்தபடி தோல் எரிந்து தசை எரிந்து, எழும்புகளிலிருந்து புகை வெளிவரும் வண்ணம் ஓடுவார்கள். ஆனால் இம்முறை அக்கதவு மூடப்படாது. அக்கதவிலிருந்து வெளியில் வீசியெறியப்பட்டு ஒரு பென்னம்பெரிய மலக்கழிவுக்குழியில் விழுவார்கள்.

## நாமறிந்த புழுக்கள் அல்ல

புத்த பகவான், ‘அந்த மலக்கழிவுக்குழியில் ஊசியை போன்ற புழுக்கள் நிறைந்திருக்கும்.என மொழிந்துள்ளார். இன்ஜெக்ஷன் போடும் போது சருமத்தினையும் தசையினையும் ஊடுருவி ஊசி உள்ளே போகும் போது ஏற்படும் நுண்ணிய வேதனையை நாம் அனுபவித்திருப்போமல்லவா? அதேபோல் இந்த மலக்கழிவுக்குழியில் வாழும் புழுக்கள் அந்த குழியில் விழுந்தவரின் உடலை மூடும் வண்ணம் பற்றிகொள்ளும். அவ்வாறு உடலை மூடிக்கொண்டு கண்களை துளையிடும், காதுகளை ஊடுருவிச்செல்லும். மூக்கினை துளையிடும், வாயை துளையிடும். கைகால்களையும் இவ்வாறு துளையிடும். அவ்வாறாக முழு உடம்பையும் தோல், தசை, நரம்பு, என்பு என்பன ஊடுருவி சென்று என்பு மச்சையினை (சாற்றினை) உறிஞ்சி குடிக்கும். இந்த நரகம் ‘கூத நரகம்’ எனப்படும். அவர் அந்த

துன்பத்தினை அனுபவித்த வண்ணம் அதனிலிருந்து மீளும் வழியை தேடுவார். ஆயிரக்கணக்கான வருடங்கள் அதில் துன்பமனுபவித்தன் பின்னர் அதனிலிருந்து அவர் வெளியே வருவார். அவர் அதனிலிருந்து வெளிவரும் போதே நரகவாசிகள் அவரை 'குக்குல' என கூறப்படம் நரகத்திற்கு வீசிவிடுவார்கள். நீங்கள் பார்த்திருப்பீர்கள் சில பௌத்த விகாரைகளில் நரகத்தில் இருக்கும் மரங்கள் என ஒரு வகையான மரத்தினை செதுக்கியிருப்பார்கள்.

**பயத்தினை உண்டாக்க கூறிய கதைகளாகவே நினைத்தோம்.**

நான் தர்மத்தினை அறிந்து கொள்ளும் வரை இவை எம்மை பயமுறுத்துவதற்காக கூறிய கட்டுக்கதைகள் என்றே நினைத்தேன். ஆனால் புத்த போதனைகளை படிக்கும் போதுதான் இவை புத்த பகவானாலேயே மொழியப்பட்டவை என தெரிந்து கொண்டேன். அப்போது தான் இவை உண்மையே என உணர்ந்துகொண்டேன். புத்த பகவான் இந்த போதனையில் 'நரகத்தில் கூரிய பெரும் முற்களையுடைய தீயினால் எரிந்து கொண்டிருக்கும் மரம் இருக்கிறது' என மொழிந்துள்ளார். அந்த மரத்தில் அடித்து துன்புறுத்தி ஏறவிடுவார்கள். அதற்கான கர்ம வினை முடியும்வரை அந்த கொடிய துன்பத்தினை அனுபவித்த பின்னர் இவர் அதனிலிருந்து ஒரு காட்டிற்கு தூக்கி வீசப்படுவார்.

**வாள் வனம்.**

அவர் அந்தக்காட்டினுள் ஓடுகிறார். அந்த வனத்தில் உள்ள மரங்களிலிருப்பது இருபுறமும் வெட்டும்

படியாக அமைந்த இலைகளாகும். அவர் அந்த காட்டில் ஓடும்போது கூர்மையான அந்த இலைகள் விழுந்து அவரது நாசி ,காதுகள், கை கால்கள், தலை என்பன வெட்டுப்படும். இவ்வாறாக கைகால்களை அறுத்து கொண்டு நாசி, காதுகள் என்பன அறுத்து கொண்டும் இவர் அந்த காட்டிலிருந்து தப்புவதற்காக அங்கும் இங்குமாக ஓடுவார். ஆயிரக்கணக்கான வருடங்களாக இவ்வாறு திக்குத்தெரியாமல் அவர் ஓடிக்கொண்டிருப்பார். இவ்வாறாக அவர் அவ்விடத்தில் அனுபவிக்க இருந்த கர்மம் தீரும் போது அந்த காட்டில் கங்கையொன்றினை காண்கிறார். இந்த கங்கை கொதிக்கும் நீரினை கொண்டதாகும். அவர் அந்த வனத்திலிருந்து தப்புவதற்கு வேறு இல்லாததால் இந்த ஆற்றினுள் குதித்துவிடுகிறார். இவர் ஆயிரக்கணக்கான வருடங்கள் அதில் அவிந்து கொண்டிருக்கும் போது நரகவாசிகள் அவரை கொக்கிகளால் இழுத்து மேலே எடுப்பார்கள்.

### பசியினை போக்குதல்

நரக வாசிகள் அவரை இவ்வாறு இழுத்து எடுத்த ‘உனக்கு என்ன வேண்டும்’ எனக்கேட்பார்கள்.அதற்கு அவர் ‘சுவாமியே! எனக்கு மிகவும் பசிக்கிறது’

‘ஆ! அப்படியா? இரு’ என்று அவரது வாயை இரும்பு கொக்கியால் பிழந்து வாயினுள் தீப்பந்தொன்றினை விடுவார்கள். புத்த பகவான் அதனை பின்வருமாறு விபரிக்கிறார். ‘இந்த தீப்பந்தானது அவரின் உதடுகளை,நாவினை , தொண்டையினை மற்றும் குடலனைத்தையும் எரித்து கொண்டு பின்புறமாக

வெளியேறும்' என்று. அவரின் பசி இல்லாமல் போகும் வரை இவ்வாறு செய்துகொண்டேயிருப்பார்கள். அவர் வேதனையால் கத்திகொண்டிருப்பாரே தவிர இறக்க மாட்டார். அனுபவிக்க வேண்டிய கர்மவினை முடியும் வரை அவருக்கு மீண்டும் மீண்டும் உடம்பு தோன்றிக்கொண்டே இருக்கும்.

## தாகத்திற்கு உலோக திரவமே..

அதன் பின்னர் மீண்டும் இவரை நரகவாசிகள் இழுத்து கொண்டு போவார்கள். 'இப்போது உனக்கு என்ன வேண்டும்' எனக்கேட்பார்கள். அதற்கு அவர் 'சுவாமியே! எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது' 'ஆ! அப்படியா? இரு! என்று அவரது வாயை இரும்பு கொக்கியால் பிழந்து வாயினுள் கொதிக்கின்ற உலோக திரவத்தினை ஊற்றிவிடுவார்கள். இந்த உலோக திரவம் அவரின் உதடுகளை, நாவினை, தொண்டையினை மற்றும் குடலனைத்தையும் எரித்து கொண்டு பின்புறமாக வெளியேறும். அவரின் தாகம் இல்லாமல் போகும் வரை இவ்வாறு செய்துகொண்டேயிருப்பார்கள். அவர் வேதனையால் கத்திகொண்டிருப்பாரே தவிர இறக்க மாட்டார். அனுபவிக்க வேண்டிய கர்மவினை முடியும் வரை அவருக்கு மீண்டும் மீண்டும் உடம்பு தோன்றிக்கொண்டே இருக்கும். புத்த பகவான் மேலும் விபரிக்கிறார். 'இவ்வனைத்து துன்பங்களை அனுபவித்த பின்னரும் இந்த மானுடன் வேதனையால் கதறக்கதற நரகவாசிகள் மீண்டும் அவரை மகா நரகத்திற்கு வீசிவிடுவார்கள்.

**இவற்றை பார்க்கும் யாருக்கும் இப்படித்தான் தான் தோன்றும்.**

பாருங்கள், புத்த பகவான் நரகத்தின் இயம அரசன் நினைக்கும் எண்ணவலைகளை கூட அறிந்து கொள்கிறார். புத்த பகவான் இவ்வாறு மொழிகிறார். 'புண்ணியமிகு பிக்குக்களே! இயம அரசனுக்கு, பாவம் இந்த உயிர்கள்; பாவங்களை செய்து பல்வேறு விதமாக கர்மத்தின் படி துன்பங்கள் அனுபவிக்கின்றன. ஐயோ! என்னாலும் இந்த இயம அரசர் எனும் பதவியிலிருந்து நீங்கி மனித உலகில் பிறந்து சம்மா சம்புத்த பகவான் ஒருவருடைய தர்மத்தினை செவிமடுத்து உன்னதமான மோட்சத்தினை அடைய முடியுமாயின் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என்று தோன்றுமாம்.

**இவற்றை கூறி ஏனையோருக்கு பயத்தினை உருவாக்க எவ்வித தேவையும் இருக்கவில்லை.**

புத்த பகவான் ஒரு போதனையிலே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு குறிப்பிடுவதற்கு காரணம் பக்தி இல்லாதவர்கள் இவ்வாறு சிந்திக்கலாம் என்றாகும். புத்த பகவான், **(தங் கோ பன அஹங் பிக்கவே)** புண்ணியமிகு பிக்குக்களே! நான் இவ்வாறு கூறும் விடயங்கள். **(நாஞ்ஞஸ்ஸ சமணஸ்ஸ வா பிராஹ்மனஸ்ஸ வா சுத்வா வதாமி)** நான் யாரிடமும் கேட்டு தெரிந்து கொண்டவை அல்ல. **(அபி ச யதேவ மே சாமஞ்ஞாதங்)** நான் உய்த்ததறிந்து கொண்ட விடயங்களேயாகும். **(சாமங் திட்டங்)** நான் கண்டவையே! **(சாமங் விதிதங்)** என்னால் உறுதி செய்யப்பட்டவையேயாகும். **(தமேவாஹங் வதாமி)** இவற்றையே நான் கூறுகிறேன்.

## ஞானமுள்ள ஒருவருக்கு மாத்திரம் தான் புரியும்.

பாருங்கள், அதனை வாசிக்கும் போது சோவான் நிலையை அடைவதால் எவ்வளவு நன்மை கிடைக்கும் என்பதனை உணர்ந்து கொள்ளலாம். நடுநிலையிலிருந்து நீங்கள் உங்களை பற்றி நினைத்து பாருங்கள். இவ்வாறாக இவ்வனைத்தும் கர்மத்தின் படியே நடக்கும் மென்றால் நாம் எத்தனை முறை இதற்கு முன் நரகத்தில் பிறந்திருப்போம்...? ஆம். நாம் பிறந்திருப்போம். இங்கு கூறப்பட்ட வேதனைகளையும் அனுபவித்திருக்கிறோம். ஆனால் எமக்கு இவை ஒன்றும் நினைவில் இல்லை. எப்படியாவது எம் அனைவரும் செய்த புண்ணியத்தினால் மனித உலகில் மனிதர்களாக பிறந்து விட்டோம். பாருங்கள் இவ்வனைத்து துன்பங்களிலிருந்தும் நீங்கி வந்து நாம் மீண்டும் மூட நம்பிக்கைகளில் அல்லவா மூழ்கி இருக்கிறோம்? பாருங்கள் புண்ணியவர்களே! இவ்வாறான சன்சார பயணத்தில் பயணிக்கும் எமக்கு மூட நம்பிக்கைகளினால் உள்ள பயன் என்ன? இயம அரசனிடம் செல்லும் போது ஐயோ! இவர் அறியாமையால் இருந்ததால்தானே பாவம் செய்தார் இவரை விட்டுவிடுவோம் என நினைப்பாரா? இல்லை. நரகத்தில் பிறந்தவரது பிணத்தை எரித்தார்களா? புதைத்தார்களா? இல்லை தூக்கி வீசினார்களா? என பார்ப்பாரா இல்லை. மாறாக நரகத்திற்கு சென்ற போது பார்க்கும் ஒரே ஒரு விடயம் மனதினால் நினைத்தவை, உடம்பினால் செய்தவை, வார்த்தையினால் பேசியவையே தவிர வேறொன்றுமில்லை.

**எம் அனைவரினதும் நிம்மதி மோட்சமே ஆகும்.**

இப்படியாக எமது வாழ்வினை பார்க்கும் போது எமது வாழ்விற்கு தர்மம் ஒன்று தான் ஒரே புகலிடம். வேறொன்றுமில்லை. ஆம்.. வேறெந்த பாதுகாப்புமில்லை. ஏனெனில் எமது வாழ்வு எவ்வாறு முடிவுறும் என்பதனை நாமறியோம். நாம் எங்கிருந்து வந்து பிறந்தோம்? என்பதனையும் அறியோம். ஆனால் இப்போது நாம் மனிதர்களாக பிறந்துள்ளோம். எமது மூதாதையர் எமக்கு மூட நம்பிக்கைகளை பழக்கி கொடுத்தனர். நாமும் அவர்களை பின்பற்றியபடி அவற்றினை தலையில் தூக்கியபடி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் எமது அதிஷ்டவசமாக எமக்கு புத்த பகவான் ஒருவர் கிடைத்தார். அவரது தர்மம் கிடைத்தது. அந்த தர்மம் எமக்கு கிடைத்திராவிடில் இன்னும் நாம் குருடர்கள் போலவே வாழ நேரிடும்.

**பெருவிரல் நகத்தின் மீது எடுத்த மண் போன்ற குறைவான எண்ணிக்கையானோர்!!**

நாம் மரணித்து இன்னுமோர் இடத்தில் பிறக்கும் வரை நாம் அதனை அறியோம். புத்த பகவான் தன் திருக்கரத்தின் பெருவிரல் நகத்தின் மீது கொஞ்சம் மண்ணை எடுத்து இவ்வாறு மொழிந்தார். 'நரகத்தில் பிறந்த ஒருவர் மீண்டும் மனித உலகில் பிறப்பாராயின் அது எனது கரத்தின் பெருவிரல் நகத்தின் மீதிருக்கும் கொஞ்சம் மண்ணை போன்று மிக மிக குறைந்த எண்ணிக்கையானோரே' அதன் அர்த்தம் என்ன? நரகத்தில் பிறக்கும் பூமியளவிலான மண்ணை போன்ற எண்ணிக்கையானோர் மீண்டும் மனித உலகிற்கு

வருவதில்லை என்பதாகும். இதனையிட்டு புத்த பகவான் இன்னுமொரு உவமையை மொழிந்துள்ளார். நீங்கள் சிலவேளை அந்த உவமையை கேட்டிருப்பீர்கள். அதுதான், ஒருகண் தெரியாத கடலாமை ஒன்று ஏர் துவாரத்தினூடாக வானத்தினை பார்ப்பது போன்று மனித வாழ்வினை ஒருவர் பெறுவதாயின் அது மிக அரிதானது. என்பதாகும்.

## இறக்கும் அனைவருமே மனித பிறவி கிட்டும் வரை அவகாசத்தில் சுற்றி திரிலார்களா?

'சம்யுக்த நிகாயம்' எனும் புனித நூலில் 'ஜிக்கல' எனும் சூத்திரத்தில் புத்த பகவான் 'ஒரு மனிதன் நரகத்தில் பிறந்து மீண்டும் மனித பிறவியை எய்துவதை விட கடலாமை ஒன்று ஏர் துவாரத்தின் வழியே வானத்தை பார்ப்பது இலகுவானது' என்று மொழிந்துள்ளார். எமது உறவினர்கள், நண்பர்கள் எத்தனையோ பேர் மரணித்திருக்கின்றனர். அவர்கள் அனைவருமே அவகாசத்தில் திரிந்து கொண்டிருக்கிறார்கள், என்றே நினைத்து கொண்டிருக்கிறோம். அதேபோல் அவர்கள் மீண்டும் மனித பிறவி கிட்டும் வரை அவகாசத்தில் சுற்றி திரிகிறார்கள், என்றே நாம் நினைத்து கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மை என்பது அதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். மனித வாழ்வில் அவரது இறுதி மூச்சு நிற்கும் போதே ஒருவர் ஒரு முட்டையுனுள் சென்று பிறக்கிறார் அதற்கு 'அண்டஜ' சூழலில் (முட்டையுனுள் பிறக்கும் பிறவிகளை குறிப்பிடும் பாளி சொல்) பிறத்தல் எனக்கூறப்படும். அவ்வாறில்லாவிடில் ஒரு ஈரலிப்பான சூழலில் பிறப்பார்.

அதாவது மலக்கழிவு குழிகளில், ஏனைய உயிர்களின் வயிற்றுக்குடல்களில், பழுதடைந்த உணவுகளில் சென்று பிறப்பார். அவ்வாறு ஈரலிப்பான சூழலில் பிறப்பதனை ‘சங்சேதஜ பிறப்புகள்’ என புத்த பகவான் குறிப்பிட்டுள்ளார். சிலர் மனித உலகில் இறுதி மூச்சு நிற்கும் போதே நரகத்தில் பிறந்துவிடுவார்கள். சிலர் பிரேத பிசாசு உலகத்தில் பிறந்திருப்பார்கள். சிலர் தேவர்களாக பிறந்திருப்பார்கள். இதனை ‘ஓபபாதிக பிறப்புக்கள்’ என புத்த பகவான் மொழிந்துள்ளார்.

## ஆதி புலப்படாத நீண்ட சன்சாரத்தில் பயணிக்கும் பயணிகளே நாம்!

மனித உலகில் பிறக்கவிருக்கும் ஒருவர் வேண்டுமானால் சில குறுகிய காலம் அவகாசத்தில் இருக்கக்கூடும். ஆனால் உயிர்கள் ஒவ்வொரு பிறவிகளில் பயணிப்பதானது மனித வாழ்விலிருந்து நரகத்திற்கு, அதிலிருந்து மிருக உலகிற்கு, அங்கிருந்து பிரேத (பிசாசு) உலகிற்கு, அங்கிருந்து சிலநேரம் மீண்டும் மிருகலோகத்தில் பிறக்க நேரிடும். இவ்வாறாக சில உயிரகள் பல கோடி வருடங்கள் நால்வகை நரகங்களிலே பிறந்து அரிதாகவே மனித உலகிலோ அல்லது தேவ உலகிலோ பிறக்க முடியும். இவ்வாறு நாம் சன்சாரத்தில் பயணிப்பதனை அர்த்தமுள்ளதென நீங்கள் நினைக்கின்றீர்களா?

## நாம் இப்போதே மோட்சமடைய தேவையில்லை! நால்வகை நரகங்களுக்கே போக வேண்டும்.

இவை தோன்றுவது படிச்சசமுப்பாதத்திலாகும் (காரணகாரிய செயற்பாட்டினிலாகும்.) இந்த

துக்கத்தினை ஒருவர் உய்த்தறிந்தால் அவர் படிச்சசமுப்பாதத்தினை உய்த்தறிந்தவராவார். படிச்சசமுப்பாதத்தினை உய்த்தறிந்தால் அவர் துக்கத்தினை உய்த்தறிந்தவராவார். அதனால் தான் புத்த பகவான் 'தலை தீ பற்றி எரியும் போது அதனை அனைப்பதற்காக எடுக்கும் முயற்சியிலும் பார்க்க ஒருவர் நாற்பேருண்மைகளை உய்த்துணர முயற்சி எடுக்க வேண்டும்' என மொழிந்தார்.

நீங்கள் சிலவேளை கேட்டிருப்பீர்கள். சிலருக்கு தர்மத்தின் படி வாழுங்கள் எனக்கூறும் போது அவர்கள் 'ஐயோ எங்களுக்கு நேரமில்லையே! என்று கூறுவார்கள். எங்களுக்கு இன்னும் காலம் இருக்கிறது. இப்போதே முடியாது, எங்களுக்கு ஓய்வு நேரமே இல்லை பின்பு எவ்வாறுதான் இவற்றை செய்ய முடியும், எமக்கு இப்போதே மோட்சமடைய முடியாது. இன்னும் வேலை இருக்கிறது. என கூறுபவர்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அப்படியாயின் புத்த பகவானும் 'நேரம் கிடைக்கும் போது தர்மத்தினை நீங்கள் பழக்கப்படுத்துங்கள்' என கூறியிருக்கலாமே! அவ்வாறில்லாமல் தலை தீ பற்றி எரியும் போது அதனை அனைப்பதற்காக எடுக்கும் முயற்சியிலும் பார்க்க ஒருவர் நாற்பேருண்மைகளை உய்த்துணர முயற்சி எடுக்க வேண்டும் என கூறுவதற்கு காரணம் புத்த பகவான் இந்த சன்சார பயணத்தின் பயங்கரத்தினை கண்டதனாலேயே ஆகும்.

## நால்வகை நரகங்களில் வீழ்வதற்கு சிறு பாவம் போதும்

நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொண்டிராத

ஒருவருக்கு நரகத்தில் பிறப்பதற்கான சந்தர்ப்பமே அதிகம். அதனால்தான் நான் போதுஜ்ஜனரின் வாழ்வு நீர் குவளைக்கும் மோட்சத்தினை சாட்ஷாத் (உறுதி) செய்துள்ள ஒரு ஆரிய சீடனுடைய வாழ்வினை கங்கைக்கும் ஒப்பிட்டு கூறப்பட்ட உவமையை கூறினேன். கங்கையை போன்ற மனம் படைத்த ஒருவருக்கு தான் ஓரளவேனும் பாதுகாப்பு கிடைக்கின்றது.

## விளக்கேற்றாவிட்டாலும் இரவிற்கு அஞ்சாதீர்கள்

ஒரு சில வேளைகளில் நாம் எமக்கு பாதுகாப்பிற்காக ஏற்படுத்திகொள்ளும் விடயங்களே எம்மை அச்சத்திற்கும் உள்ளாக்குகின்றன. என்னிடம் நேற்று ஒருவர், 'சுவாமியே! நான் வருடக்கணக்காக விளக்கு பூஜை ஒன்று செய்கிறேன். நான் இந்த தர்மத்தினை பின்பற்றும் போது அது ஒரு மூட நம்பிக்கை என்பதனை உணர்ந்து கொண்டேன். இப்போது நான் அதனைவிட்டு நீங்க வேண்டும் என நினைக்கிறேன். ஆனால் பயமாக இருக்கிறது' எனக்கூறினார். பாருங்கள் புண்ணியவர்களே! தனக்கு பாதுகாப்பிற்காக செய்த விடயமே தற்போது பயத்திற்கும் காரணமாகியுள்ளது. பார்த்தீர்களா? மூட நம்பிக்கைகளை பின்பற்றுவதால் இருக்கிற அபாயத்தினை. அதனை நிறுத்துவதற்கும் பயம்.

## எமது முதுகெழும்பு பலமில்லை.

பாருங்கள், தனக்கு பாதுகாப்பிற்கு செய்து கொண்ட மூட நம்பிக்கை தனக்கே எவ்வாறு பயத்தினை உருவாக்குகிறது என்பதனை. இந்த

மூட நம்பிக்கையினால் எத்தனை பேர் தர்மத்தினை உய்த்தறியும் வாய்ப்பினை இழந்திருப்பார்கள் என்று. இவற்றை செய்த படி வாழ்ந்து இறுதியில் மிருகலோகத்திலோ அல்லது பிரேத லோகத்திலோ பிறக்க வேண்டியதுதான். பிரேதலோகத்தில் பிறந்தாலாவது புண்ணியத்தினையாவது அனுமோதித்து கொள்ளலாம். நரகத்தில் பிறந்தால் அதுவும் இல்லை.

**அனைவராலும் புண்ணியத்தினை அனுமோதித்து கொள்ள முடியாது.**

ஒருநாள் 'ஜானுஸ்ஸோனி' எனும் அந்தணன் புத்த பகவானிடம் 'பாக்கியமுள்ள பகவானே! இறந்தவர்களுக்கு புண்ணியம் கிட்டுவதற்கு புண்ணியங்களை அனுமோதிப்பார்கள். அவ்வாறு இறந்த அனைவருக்கும் அவ்வாறு வழங்கப்படும் புண்ணியத்தினை பெற்றுகொள்வார்களா?' என்று கேட்டார். அதற்கு புத்த பகவான் 'இல்லை' என மொழிந்தார். அத்தோடு 'இறந்தவர் நரகத்தில் பிறந்திருப்பாராயின் அவர் தீப்பந்துகளை சாப்பிட்டு கொண்டிருக்க வேண்டியதுதான் அவரால் புண்ணியத்தினை பெற முடியாது. இறந்தவர் மிருகலோகத்தில் பிறந்திருப்பாராயின் அவர் பிறந்த இடத்திற்கு ஏற்றாற்போல் உணவினை உட்கொண்டிருப்பாரே தவிர புண்ணித்தினை பெற முடியாது. அதேபோல் இறந்தவர் மனித உலகில் பிறந்திருப்பாராயின் அந்த உணவினை உட்கொண்டபடி இருப்பாரே தவிர அந்த புண்ணியத்தினை பெற முடியாது. இறந்தவர் தேவ உலகில் பிறந்திருப்பாராயின் திவ்விய

உணவினை உட்கொண்ட படி திவ்விய சுகத்தில் திளைத்திருப்பாரே அன்றி அந்த புண்ணியத்தினை பெறும் தேவை அவருக்கு இருக்காது. இறந்தவர் பிரேத உலகில் பிறந்தால் மாத்திரம் தான் புண்ணியத்தினை ஏற்றுக்கொள்ளலாம்'. என மொழிந்தருளினார்

## தனக்கு தானே துணை

இறந்த அனைவரும் பிரேத உலகில் பிறப்பார்கள் என நினைக்கிறீர்களா? ஒரு போதும் இல்லை. ஏனையோரை விடுத்து நாம் எம்மை பற்றி நினைத்து பார்ப்போம். எம்மோடு வாழும் அனைவரையும் எம்மால் சுவர்க்கத்தில் பிறக்கச்செய்யவதற்கு முடியாது. ஆனால் நாம் எம்மை பற்றி நினைத்து எம்மை பாதுகாப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இப்படித்தான் தன்னை பாதுகாக்க வேண்டும். மும்மணிகள் மீது அசைக்க முடியாத நம்பிக்கையை நிலைநிறுத்த வேண்டும். அப்படிப்பட்டவர்களது பாதுகாப்பினை புத்த பகவான் பின்வறுமாறு உறுதிபடுத்தியுள்ளார் **'யே கேசி புத்தங் சரணங் கதாஸே ந தே கமிஸ்ஸன்தி அபாயங்'** (எவராயினும் ஒருவர் புத்த பகவானை முழு மனதோடு சரணடைவாராயின் ஸ்ரீ சத்தர்மத்தினை சரணடைவாராயின் ஆரியபிக்குமாரை சரணடைவாராயின் அவர் நரகத்தில் பிறக்கமாட்டார்) என்று. அத்தோடு **'பஹாய மானுஸங் தேஹங்'** (மனித தேகத்தினை நீங்கியதும்) **'தேவகாயா பரிபூரெஸ்ஸந்தி'** (தேவ உலகில் பிறப்பார்) என்றும் மொழிந்தருளினார்.

## மீண்டும் மனிதனாக பிறந்தால்..

பாருங்கள் புண்ணியவர்களே! நாம் நினைப்பதனை போல் தேவ உலகத்தில் பிறப்பது இலகுவானதல்ல. மனித உலகில் பிறப்பதுவும் இலகுவானதல்ல. நாம் செய்த ஏதாவது புண்ணியத்தின் விளைவாக நாம் மீண்டும் மனிதராக பிறக்கும் போது மூட நம்பிக்கைகள் கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்தோமென்றால் அது எமது அழிவேயாகும்.

## இருளை அகற்றும் ஒளி

இருள் என்றால் அது இருளேதான். ஒளி எனில் அது ஒளிதான். ஒளியையும் இருளையும் ஒன்றாக வைக்க முடியுமா? முடியாது. ஒளி இருக்கும்போது இருள் அகன்று விடும். இருள் சூழும் போது ஒளி அகன்றுவிடுகிறது. அதேபோல் மூடநம்பிக்கைகளை கொண்டு புத்த பகவானை சரணடைய முடியாது. சம்மா திட்டி (தெளிவான பார்வை) என்றால் அது மட்டும்தான் அதனில் மூட நம்பிக்கைகளில் இடமில்லை. மூட நம்பிக்கைகளையும் சம்மா திட்டியையும் கலந்து கொண்டு இவற்றினை செய்ய முடியாது.

## ஐயோ! எம்மை விட்டு போகாதீர்கள்.

நாம் இவ்வாறு நினைத்து பார்ப்போம். ஒருவர் இறந்துவிட்டார். அவரை சுற்றி அவரது உறவினர்கள் ஒப்பாரி வைத்தபடி இருக்கின்றனர். அப்போது நினைவில் புத்த பகவானே வர வேண்டும். அவரது தர்மமே நினைவில் வர வேண்டும். ‘நான் இப்போது பிரியமானவர்களின் பிரிவின் துயரத்தினை அல்லவா

அனுபவிக்கிறேன்.. இன்னும் எத்தனை பிறப்புக்களுக்கு நான் இதனை அனுபவிக்க வேண்டும்..? வெகு சீக்கிரமாகவே இந்த சன்சாரத்திலிருந்து மீள வேண்டும்' எனும் எண்ணம் நினைவில் வர வேண்டும்.

நீங்கள் மரண வீடுகளில் 'பிரியமானவர்களிடமிருந்து பிரிவது துன்பத்தினையே தருகிறது. அதனை தானே புத்த பகவான் மொழிந்தார்..அது உண்மையே..அந்த உண்மையை நான் உணருகிறேன்..' எனக்கூறுவதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லை. 'ஐயோ எங்களை விட்டு போகாதீர்கள்! இனிமேல் எப்போது வருவீர்கள்? சொல்லுங்கள்!' என பிணத்தை கட்டிபிடித்து அழுவதையே நாம் பார்த்திருக்கிறோம். அதில் உறைந்திருப்பது அஞ்ஞானமேயாகும். யதார்த்தத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தவறுதலாகச்சரி திடீரென்று அந்த பிணம் எழுந்து 'சரி சரி அழுக வேண்டாம்' நான் வந்து விட்டேன்தானே! எனக்கூறினால் எப்படியிருக்கும்..? கும்பிட்டு கொண்டுடிருந்தவர்கள் திசை தெரியாமல் ஓடிவிடுவார்கள் 'ஐயோ! நாம் சும்மா தான் சொல்லி பார்தோம்' என கூறுவார்களாயிருக்கும். ஆம் அப்பேர்பட்டதொரு அழுகையே மக்களிடம் இருக்கிறது.

## ஞாபகப்படுத்தி அழ வேண்டிய விடயங்கள் இதோ..!

தமது வாழ்வினை உய்த்துணர்வோடும் ஞானத்தோடும் பார்க்கும் ஒருவருக்கு அழ வேண்டுமானால் அழ வேண்டிய விடயங்கள் பின்வருபவையே! ஆம் எமது மனதில் தோன்றும் பாவ சிந்தனைகளை நினைத்தே அழ வேண்டும். பஞ்ச நீவரணங்களை (மன ஒருமைபாட்டினை தடுக்கும் ஐந்து விடயங்கள்)

நினைத்தே அழ வேண்டும். நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்ள முடியாததை நினைத்தே அழ வேண்டும். எம் வாழ்வில் உள்ள பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு இருக்கும் ஒரே வழி நாற்பேருண்மைகளை உய்த்துணர்ந்து கொள்வதாகும். அதுவே எமக்குள்ள ஒரே பாதுகாப்பு, அரவணைப்பு மற்றும் புகலிடமுமாகும்.

இதனை கருத்திற்கொண்டு நாம் அனைவரும் இந்த கௌதம புத்த பகவானது புத்த சாஸனத்திலேயே உன்னதமான சத்தியத்தை உய்த்துணர்ந்து கொள்வோம்! என்று திடமான ஒரு இலட்சியத்தினை ஏற்படுத்தி கொள்வோம்.

**சாது! சாது!! சாது!!!**

*நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ சம்மாசம்புத்தஸ்ஸ*
அந்த பாக்கியமுள்ள அரஹத் சம்மாசம்புத்த பகவானுக்கு எனது நமஸ்காரமாகட்டும்!

# 02
# அனுத்தரிய சூத்திரம்.

புண்ணியமிக்கவர்களே!

நாம் இன்று கற்பது ‘அங்குத்தர நிகாயம்’ எனும் புனிதமான நூலில் அடங்கியுள்ள ஒரு போதனையாகும். இந்த போதனையின் பெயர் அனுத்தரிய சூத்திரமாகும். அதன் அர்த்தம்தான் உன்னத நிலைக்கு உட்படுத்துவதாகும். புத்த பகவான் அதனை பின்வருமாறு மிக அழகாக மொழிகிறார்.

நாம் எமது வாழ்வில் ஒவ்வொரு விடயங்களை காணச்செல்கின்றோம். குளங்கள், வாவிகள், குன்றுகள் என்பவற்றை பார்க்க செல்கின்றோம். மிருகங்களை பார்க்க செல்கின்றோம். திரைப்படங்களை பார்க்க செல்கின்றோம். உற்சவங்களை பார்க்க செல்கின்றோம். மனிதர்கள் சாக்குகளில் இறங்கி ஓடுவதனை பார்க்க செல்கின்றோம். புதுவருட கொண்டாட்டங்களில்

கூத்துக்களை பார்க்க செல்கின்றோம். ஆடல் பாடல்களை பார்க்க செல்கின்றோம். இம்மாதிரியாக நாம் பல்வேறுபட்ட விடயங்களை காணச்செல்கின்றோம்.

## இவற்றை பார்ப்பதால் என்ன பயன்?

புத்த பகவான் மொழிகிறார். ஒரு சிலர் மூட நம்பிக்கை கொண்ட துறவிகளை காணச்செல்கின்றனர் . அவர்களை காண செல்வதால் எமக்கு ஏற்படும் நன்மைகள்தான் என்ன? அதேபோல் ஆடல் பாடல்களை பார்ப்பதாலோ அல்லது மிருகங்களை பார்ப்பதலோ ஏற்படும் நன்மைதான் என்ன? ஒருசிலர் நாடுகளை, நகரங்களை பார்க்க செல்கின்றனர். வேறுசிலர் சமுத்திரங்களை பார்க்க செல்கின்றனர். புத்த பகவான் மொழிகின்றார். 'இவ்வாறு பார்க்க செல்பவை இழிவானவையாகும், சிறுபிள்ளைதனமானதாகும்., போதுஜ்ஜனருக்கே (மும்மணிகளை சரணடையாதவருக்கே) உரித்தானதாகும். (அனரியோ) உன்னதமற்றவையாகும். (அனத்தசங்ஹிதோ) தீமைகளை விளைவிப்பதாகும்.'

## காதலின் சின்னம் ஒரு கல்லறையா?

இந்தியாவில் மிகவும் பிரசித்தி பெற்றதொரு கல்லறை இருக்கின்றது. அதுதான் தாஜ்மஹால். புத்த பூமி வணங்குவதற்கு செல்லும் அநேகமான எமது நாட்டவரும் அந்த கல்லறையை பார்க்க செல்வார்கள். நானும் ஒரு நாள் அந்த கல்லறையை பார்க்க சென்றேன். அங்கு சென்றவுடனே நான் 'இதனை பார்ப்பதால் என்ன பயன்?' என்று நினைத்தேன். அன்றிலிருந்து நான் அந்த கல்லறையை பார்ப்பதை விட்டுவிட்டேன். அன்றிலிருந்து

நான் எவரையும் அந்த கல்லறையை பார்க்க செல்லுமாறு கூறியதில்லை. 25,000 அடிமைகளின் உதவியாலே அந்த கல்லறை கட்டப்பட்டது. அப்பாவி மக்களின் கண்ணீரினாலேயே கட்டப்பட்டது. ஆனால் அதனை பார்வையிடும் எவருக்கும் இது தோன்றுவதில்லை. அது எதன் சின்னம்? காதலின் சின்னம். அதேபோல் அந்த கல்லறையை போல் இன்னுமொன்றினை உருவாக்க கூடாது என அதனை நிர்மாணித்த பொறியியலாளரின் கண்களும் குருடாக்கப்பட்டன. அப்படியாயின் அது இழிவானதல்லவா? சிறுபிள்ளைதனமானதல்லவா? ஆம் போதுஜ்ஜனருக்கு உரித்தானதாகும். உன்னதமற்றதாகும். தீமைகளை விளைவிப்பதாகும். ஆனால் உலகத்தோரால் வருணிக்கப்படுபவை இவையே! அதற்கு காரணம்தான் அவற்றை விட சிறந்த எதனையும் அவர்கள் அறிந்திராமையாகும்.

## பார்க்க வேண்டுமாயின் பாருங்கள்..

புத்த பகவான், 'ஒருவர் புத்த பகவானையோ அல்லது புத்த சீடனையோ காணச்சென்றால் அவர் தனது வாழ்விற்கு அர்த்தத்தை தேடிக்கொள்கிறார். வாழ்விற்கு மிகவும் தேவையானதை தெரிந்து கொள்கிறார்' என மொழிந்தார்.

புத்த பகவானது காலத்திலே 'மிதிலை' எனும் நகரிலே மிகவும் செல்வாக்குடைய மதிப்பிற்குரிய ஒரு அந்தணர் இருந்தார். அவரது பெயர் பிரம்மாயு. அவருக்கு அப்போது 120 வயது நிரம்பியிருந்தது. அவர் 120 வயது வாழ்ந்ததால் அவருக்கு புத்த பகவானை காணும் வாய்ப்பு கிடைத்தது. அவ்வாறில்லாது

அவரது ஆயுட்காலம் எண்பதோ அல்லது தொன்னூறாகவோ இருந்திருந்தால் அவருக்கு அந்த பாக்கியம் கிட்டிருக்காது.

**ஆராய தேவையில்லை. என்னிடம் இருக்கிறது.**

இவர் புத்த பகவானை காணச்சென்று பகவானது 32 வகையான மகா புருட இலட்சிணைகளை ஆராய்ந்தார். புத்த பகவான் தனது 32 வகையான புருட இலட்சணங்களையும் அவருக்கு காணச்செய்தார். ஆனாலும் இந்த அந்தணர் புத்த பகவானையே கண்ணிமைக்காது பார்த்து கொண்டு இருந்தார். அப்போது புத்த பகவான் 'புண்ணியமிகு பிராம்மணரே! நீங்கள் தேடும் 32 வகையான புருட இலட்சணங்களும் என்னிடம் இருக்கிறது. அது தொடர்பாக சந்தேகம் கொள்ளாதீர்கள்.' எனக்கூறினார். அந்த அந்தணரிடம் புத்த பகவான், "புண்ணியமிகு அந்தணரே! உய்த்துணர்ந்து கொள்ள வேண்டிய அனைத்தினையும் நான் உய்த்துணர்ந்து கொண்டேன். அழிக்க வேண்டியவற்றை நான் அழித்துவிட்டேன். மனதிலிருந்து நீக்க வேண்டியவற்றை நான் நீக்கி விட்டேன். பூரணப்படுத்த வேண்டிய விடயங்கள் அனைத்தினையும் நான் முழுமையாக பூரணப்படுத்திவிட்டேன். அதனால் நான் 'புத்த' எனப்படுபவராவேன்" என மொழிந்தார்.

**சந்தேகமின்றி தர்மத்தினை செவிமடுங்கள்.**

அதன்பிறகு மீண்டும் புத்த பகவான் அந்த அந்தணரை பார்த்து, 'புண்ணியமிகு பிராம்மணரே! இவ்வுலகிற்கும் மறுவுலகிற்கும் நன்மையை விளைவிக்கும் விடயங்கள்

தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் என்னிடம் கேளுங்கள்' என்றார்.

பிரம்மாயு அந்தணன் கண்களால் காண வேண்டிய உன்னதமானதை கண்டார். ஆம் மேன்மை பொருந்திய புத்த பகவானை கண்களால் கண்டார். அவர் புத்த பகவானிடம், 'இவ்வுலகில் பிராம்மணன் என அழைக்கப்படுபவர் யார்? இவ்வுலகில் ஞானத்தினால் பரிபூரணமடைந்தவர் எனக்கூறப்படுபவர் யார்? இவ்வுலகில் முழுமையடைந்தவராக கருதப்படுபவர் யார்? புத்த எனப்படுபவர் யார்? முனிவர் எனப்படுபவர் யார்?' எனக்கேட்டார்.

**பக்தியுடன் சரணடைகிறேன்**

புத்த பகவான் பின்வருமாறு விபரிக்கிறார். 'ஒருவருக்கு எல்லைகளற்ற முற்பிறப்புக்களை காண முடியுமாயின், உயிர்கள் மரணிப்பதனையும் மரணித்து சுவர்க்க நரகங்களில் பிறப்பதனையும் காண முடியுமாயின், மனமாசுகளை முற்றாக அழித்தவராயின், அதேபோல் பிறப்பு, இறப்பு எனும் சன்சாரத்திலிருந்து முழுமையாக நீங்கியவராயின் அவரே புத்தர் என அழைக்கப்படுபவராவார்.' என மொழிந்தார். பிரம்மாயு அந்தணர், தான் இப்போது நின்று கொண்டிருப்பது ஒரு புத்த பெருமகன் முன்னிலையில் தான் என உணர்ந்தார். உடனே இருகைகூப்பிய வண்ணம் புத்த பகவானது திருப்பாதங்களில் விழுந்தார் தன் இருகைகளாலும் பகவானது திருப்பாதங்களை வருடிய வண்ணம், 'சுவாமியே! நான்தான் பிரம்மாயு என அழைக்கப்படும் அந்தணன்', 'சுவாமியே! நான்தான்

பிரம்மாயு என அழைக்கப்படும் அந்தணன்', 'சுவாமியே! நான் தான் பிரம்மாயு என அழைக்கப்படும் அந்தணன்' எனக்கூறலானார். புத்த பகவான் அவரை எழச்செய்து உன்னத தர்மத்தினை போதித்தார். இந்த போதனை முடிவுறும் போது பிரம்மாயு அந்தணன் சோவான் நிலையை எய்தி இருந்தார்.

**வயது வித்தியாசமில்லை.**

புத்த பகவான் உட்பட பிக்குமார்களுக்கு ஏழு நாட்கள் தொடர்ந்து அன்னதானம் வழங்கினார். சிறிது காலத்திற்கு பின்னர் அவர் மரணமடைந்தார். பிக்குமார்கள் புத்த பகவானிடம் அவர் மரணத்தின் பின் எங்கு பிறந்தார் எனக்கேட்டனர். அதற்கு புத்த பகவான் 'பிரம்மாயு அந்தணன் மரணிக்கும் போது அநாகாமி நிலையை அடைந்திருந்தார்' எனக்கூறினார். பாருங்கள் புண்ணியவர்களே! தனது 120 வது வயதில்தான் பிரம்மாயு அந்தணர் தர்மத்தினை உய்த்துணர்ந்து கொண்டார். புத்த பகவானை கண்டு வெகு நாட்களாகவில்லை. ஆனால் அவர் உத்தம நிலையை அடைந்தார். கண்களால் காணும் விடயங்களில் புத்த பகவான் ஒருவரை காண்பதே உன்னதத்தை தரும். அவ்வாறில்லாவிடில் புத்த சீடரை காண்பதே உன்னத்தை தரும். இதுதான் தஸ்ஸ னானுத்தரியம். அதாவது காண்பதனால் உன்னத நிலையை அடைதலாகும்.

**இருளில் கண்டாலும்..**

உன்னதமானதை இருளில் பார்த்தாலும் மேன்மையே!

புத்த பகவான், ஒருநாள் தர்மத்தினை போதித்து வரும் வேளையில் இரவுப்பொழுதாகி விட்டது. பகவான் வருகை தரும் வழியில் குயவர்களுடைய மட்பாண்டங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் வீடுகள் இருந்தன. அவ்வாறானதொரு வீட்டில் ஒரு பர்ணசாலை இருந்தது. அதனை பார்த்த புத்த பகவான் அந்த பர்ணசாலையின் உரிமையாளரிடம் 'புண்ணியமிக்கவரே! நான் இன்று இரவு இந்த அறையில் தங்கிக்கொள்ளவா?' எனக்கேட்டார். அதற்கு அந்த குயவன் 'சுவாமியே! தாராளமாக தங்கிக்கொள்ளுங்கள்' என அனுமதித்தான். அந்த அறையில் சிறு பாய் துண்டொன்று இருந்தது. புத்த பகவான் அதனை விரித்து அதில் அமர்ந்திருந்தார்.

புத்த பகவானுக்காக துறவு பூண்ட ஒரு மன்னன் இருந்தார். அவரது பெயர் 'புக்குசாதி' அவர் மன்னராக இருக்கும் போது 'இவ்வுலகில் புத்த பெருமகன் ஒருவர் தோன்றி தர்மத்தினை போதிக்கிறார்' எனும் செய்தி கிடைத்தது. இவர் அப்போதே தனது அரச பதவியை துறந்தார். தனியாகவே புத்த பகவானுக்காக துறவு பூண்டார். அந்த துறவியும் புத்த பகவான் அன்றிரவு தங்கியிருந்த பர்ணசாலையின் அருகே அமைந்துள்ள பாதையில் சென்று கொண்டிருந்தார். இருள் சூழவும் அவர் எங்காவது தங்குவதற்கு முடிவு செய்தார். அப்போது புத்த பகவான் தங்கியிருந்த பர்ணசாலையை அவரும் கண்டார். இவரும் அந்த குயவனிடம் தங்குவதற்கு அனுமதி கேட்டார். அந்த குயவன் 'நான் உங்களுக்கு தங்குவதற்கு அனுமதிக்கலாம். ஆனால் நீங்கள் வரும் முன்பு ஒரு துறவி இங்கு

வந்து தங்கினார். அவர் அனுமதித்தால் நீங்கள் இங்கு தங்கலாம்' எனக்கூறினார்.

## புண்ணியத்தின் சந்திப்பு

புக்குசாதி துறவி புத்த பகவானிடம் 'புண்ணியமிக்கவரே! நான் இங்கு தங்குவதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா?' எனக்கேட்டார். புத்த பகவான் 'தாராளமாக தங்கிக்கொள்ளுங்கள்' என அனுமதித்தார். இந்த புக்குசாதி புத்த பகவானுக்காக துறவு பூண்டு புத்த பகவானை காணச்செல்லும் வழியில் தான் இந்த சம்பவம் இடம்பெறுகிறது. அக்காலத்தில் மின்விளக்குகள் இல்லை. இருவரும் இருளில்தான் இருந்தார்கள். அப்போது அந்த புக்குசாதி துறவி அறையில் ஒருபுறத்தில் பத்மாசன முறையில் அமர்ந்து அமைதியாக இருந்தார். அப்போது புத்த பகவான் அவருடன் பேச வேண்டும் என நினைத்து 'நீங்கள் எங்கு செல்கிறீர்கள்?' எனக்கேட்டார்.

'நான் சாவத்திய நகரிற்கு செல்கிறேன்'

'எதற்காக அங்கு செல்கிறீர்கள்?'

'புத்த பகவானை காண்பதற்காக'

'இதற்கு முன்பு நீங்கள் அவரை பார்த்திருக்கிறீர்களா?

'இல்லை'

'ஒருவேளை நீங்கள் அவரை பார்த்தால் இணங்கண்டு கொள்வீர்களா?'

'முடியாது. என்னால் அந்த உத்தமரை இணங்காண

முடியாது'

'நீங்கள் துறவு பூண்டது யாருக்காக?'

'நான் துறவு பூண்டது அந்த உத்தமருக்காகவே'

**இர்திக்களை காண்பிக்கவில்லை.**

அதன் பின்னர் புத்த பகவான், இவர் தனக்காகவே துறவு பூண்டு தன்னை காணும் நோக்கில் வந்தவர் என்பதனை அறிந்து கொள்கிறார்.

புத்த பகவான், ஏன் சித்தாற்றல்களை (இர்திக்களை) செய்வதற்கு முயற்சிக்கவில்லை? அப்படி பகவான் செய்திருந்தால் அந்த துறவி புத்த பகவான் மீது 'இவர் என்ன ஒரு மாயாவியா?' என சந்தேகம் கொண்டிருப்பார். பாருங்கள், புத்த பகவானின் உய்த்துணர்வு எப்படியானதென்று. அதன் பின்னர் புத்த பகவான் இவரிடம், 'எனது கருத்துக்களை கேட்பதற்கு நீங்கள் விரும்புறிரீர்களா?' எனக்கேட்டார். அதற்கு அவர் ஒப்புக்கொள்ளவே புத்த பகவான் அமிர்தம் போன்ற தர்மத்தினை மொழிந்தருளினார். அந்த தர்மபோதனை முடிவுறும் போது புக்குசாதி அநாகாமி நிலையினை எய்தினார். இறுதியில் புத்த பகவானின் திருப்பாதங்களை வணங்கி, 'பகவானை அறியாமல் ஒரு தோழனுடன் உரையாடுவதை போல் பேசிவிட்டேன். அறியாமையினாலேயே அவ்வாறு செய்தேன்.' எனக்கூறினார்.

**இருளில் பார்த்தாலும் சரியானதையே பார்த்தார்.**

இருளில் கண்டாலும் உன்னதமானதை அல்லவா

கண்டார்? பாருங்கள், நாம் காணும் விடயங்களில் புத்த பகவான் ஒருவரை காண்பதே எம்மை உன்னத படுத்தும். அதேபோல் புத்த சீடர் ஒருவரிடமாவது இந்த தர்மத்தினை செவிமடுக்க கிடைத்தால் அது உன்னத நிலைக்கே வழிவகுக்கும். அதுவே தஸ்ஸனானுத்தரியம். அதாவது காண்பதனால் உன்னதமடைதலாகும்.

## மனிதர்கள் புழுக்கள் போலாகிவிட்டனர்.

இரண்டாவது விடயம் தான் சவனானுத்தரியம். அதாவது செவிமடுப்பதால் உன்னதமடைதாலாகும். நாம் பாடசாலை செல்லும் பருவத்திலிருந்தே செவிமடுத்து கொண்டிருக்கிறோம். ஆசிரியர்களும் எமக்கு கற்று தருகிறார்கள். நாமும் கற்றுக்கொள்கிறோம், எழுதுகிறோம், இதுவரையிலும் உன்னதமடைந்தோமா? இல்லையே. அதேபோல் நாம் கதைகளை கேட்கிறோம் பேய் பிசாசுக்கதைகளை கேட்கிறோம். இன்னும் எத்தனையோ வகையான கதைகளை கேட்கிறோம். மேன்மையடைந்தோமா? இல்லை. எங்காவது இசை நிகழ்ச்சிகள் நிகழவிருப்பதாக அறிந்தால் அங்கு ஓடிச்செல்கிறோம். மழையில் நனைந்தபடி வெயிலில் காயந்தபடி நின்று அவற்றை கேட்கிறோம். அதனால் உன்னதத்தையடைந்தோமா? இல்லை. அவற்றை கேட்டு இரண்டு துண்டாக வெட்டப்பட்ட புழுக்களை போல் துள்ளி ஆடுகிறோம். இசை நிகழ்ச்சி இறுதியில் அயர்வும் சோர்வும் மாத்திரமே எஞ்சுகிறது. முடிவில் வீட்டிற்கு வந்து நன்றாக கண்ணயர்ந்து விடுகிறோம். அப்படியாயின் இவ்வாறு கேட்டதில் நாம் உன்னதம்

அடைந்தோமா? இல்லை.

**சிறுபிள்ளைதனமான விடயங்களை கேட்க வேண்டாம்.**

புத்த பகவான், ‘இம்மாதிரியான விடயங்களை கேட்டாலும் இன்னுமொருவருக்கு கேட்கச்செய்தாலும் அதனால் உன்னதத்தையை பெற முடியாது. அது ஏன்? ஏனெனில் அவ்வாறு கேட்கும் விடயங்கள் சிறுபிள்ளைதனமானவை, இழிவானவை. போதுஜ்ஜனருக்கு உரித்தானவை, தீமைகளை விளைவிப்பதாகும். இவ்வாறானவற்றினை செவிமடுப்பதால் வாழ்வினை உய்த்துணர முடியாது. வாழ்வினை உய்த்துணர்ந்து கொள்வதற்கு, முழுமையாக துன்பங்களிலிருந்து நீங்குவதற்கும் உன்னதம் பொருந்திய தர்மத்தினையே செவிமடுக்க வேண்டும்’. என மொழிந்துள்ளார்.

**உன்னதமானதை செவிமடுங்கள்.**

புத்த பகவான், ‘ஒருவர் புத்த பகவானையோ அல்லது புத்த சீடரையோ காணச்சென்று அவர்களுக்கு செவிசாய்ப்பாராயின் அவர் உன்னதமானதை அறிந்து கொள்வார்’. என மொழிந்துள்ளார். உன்னதமான விடயம் எது? அதுதான் நாற்பேருண்மைகள். இந்த நாற்பேருண்மைகளை செவிமடுக்க முடியாவிட்டால் அவர் செவிமடுப்பதன் மூலம் உன்னதத்தை அடையமாட்டார். எமக்கு தெரியும் புத்த பகவானது காலத்தில் எண்ணற்றோர் இந்த தர்மத்தினை செவிமடுத்து உன்னத நிலையை அடைந்தார்கள் என்று.

## எதிர்பாராத வகையிலான சந்திப்பு

புத்த பகவானது, 'சாரிபுத்த' மற்றும் 'மொக்கல்லான' எனும் உன்னதமிகுந்த சீடர்கள் இல்லற வாழ்வின் போது உபதிஸ்ஸ மற்றும் கோலித என அழைக்கப்பட்டனர் (புத்த பகவானை சரணடைய முன்பு இவ்விருவரும் தவசிகளாக இருந்தனர்). அக்காலத்தில் இவர்கள் அநேகமானோரின் கருத்துக்களை கேட்கச்சென்றனர். இவர்கள் அதனால் உன்னதநிலையை அடைந்தார்களா? இல்லை. ஒருநாள் உபதிஸ்ஸ தவசி ஒரு பாதையின் வழியாக பயணிக்கும் போது அமைதியான சாந்தமான நடத்தையையுடைய ஒரு பிக்குவை கண்டார். இவர் தான் அஸ்ஸஜி அரஹத் தேரர். அவர் உணவருந்தி ஓய்வெடுக்கும் நேரம் வரை உபதிஸ்ஸ தவசி அவரை பின்தொடர்ந்தார். ஓய்வெடுக்கும் அஸ்ஸஜி தேரரிடம் உபதிஸ்ஸ தவசி பின்வருமாறு வினவுகிறார். 'சுவாமியே உமது சாந்தமான நடத்தையை கண்டு நான் மகிழ்சியடைகின்றேன். தங்களது குரு யார்?' என்று. அதற்கு அஸ்ஸஜி தேரர், 'எனது குரு சாக்கிய வம்சத்தவர். அவர்தான் சித்தார்த்த கௌதம சம்மா சம்புத்த பகவான்' என்றார்.

'அவர் என்ன போதிக்கிறார்?'

'எனக்கு விபரமாக கூற தெரியாது. மிகவும் அண்மை காலத்திலேயே நான் இந்த புத்த சாசனத்தில் துறவு பூண்டேன்'

## ஞானமிருந்தால் ஒரு வார்த்தை கூட போதும்.

அதனை கேட்ட உபதிஸ்ஸ தவசி

'விபரமாக கூற முடியாவிடில் சுருக்கமாகவேனும் கூறுவீராக' என இரைஞ்சி நின்றார்.

'அப்படியாயின் நான் சுருக்கமாக கூறும் விடயத்தினை நீங்கள் விபரமாக உணர்ந்து கொள்வீராக' என்றார்.

**(யே தம்மா ஹேதுப்பவா)** காரணங்களால் தோன்றிய ஏதேனும் இருப்பின் **(தேஸங் ஹேது ததாகதோ ஆஹ)** அவ்வாறு தோன்றும் விடயத்தின் காரணத்தை புத்த பகவான் கற்றுத்தந்தார். **(தேஸங் ச யோ நிரோதோ)** அக்காரணத்தை நீக்கும் முறையையும் கற்றுத்தந்தார். **(ஏவங் வாதி மஹா சமணோ)** அந்த மகா உத்தமர் இதனையே கற்றுத்தருகிறார்.

அதனை செவிமடுத்தவுடனேயே நாற்பேருண்மைகளை தன்னுள்ளே உய்த்தறிந்து கொள்ளும் பாக்கியம் உபதிஸ்ஸ தவசிக்கு இருந்தது. அப்படியாயின் நீங்கள் இப்போது செவிமடுப்பதன் மூலம் உன்னதமடைவதனை உணர்ந்திருப்பீர்கள். இவ்வாறாக காணும் விடயங்களோ கேட்கும் விடயங்களோ சாதாரணமான விடயங்களாக இருக்க முடியாது.

## ஆடை கிழிந்திருந்தாலும் ஞானமிருப்பின் பிரகாசிப்பார்.

புத்த பகவானது காலத்தில் 'தாருசீரிய' என அழைக்கப்படும் ஒருவர் இருந்தார். மரப்பட்டைகளையே ஆடையாக அணிந்தவர். இதனிலிருந்து நாம் ஒரு விடயத்தை உணர்ந்து கொள்ளலாம். அதுதான் அணிந்திருக்கும் ஆடை முக்கியமானதல்ல அதன் நிறம் கருப்பானாலும் வெள்ளையானாலும் பரவாயில்லை. ஏன் மரப்பட்டையானாலும் அது முக்கியமில்லை.

முக்கியமானது அணிந்திருக்கும் ஆடையா? இல்லை. ஞானம் தான் முக்கியம். ஞானமின்றி பொன்னாடையை அணிந்தாலும் பயனில்லை. தாருசீரிய என்பவர் பல்லாயிரம் மைல்கள் தொலைவில் இருந்து புத்த பகவானை காண நடந்தே வந்தார். இவர் புத்த பகவான் வசித்திருந்த ஆச்சிரமத்திற்கு வரும் போது புத்த பகவான் காலை உணவிற்காக பிண்டபாதம்* செல்ல ஆயத்தமாகிக்கொண்டிருந்தார். தாருசீரிய புத்த பகவானை கண்டவுடனேயே 'நான் தேடும் நபர் இவர்தான்' என அடையாளம் கண்டுகொண்டார். புத்த பகவானை இணங்கண்டுகொண்டு புத்த பகவானிடம் 'சுவாமியே! நான் வெகு தொலைவில் இருந்து தங்களை காண வந்துள்ளேன்..எனக்கு தர்மத்தை போதீப்பீராக' என்று கூறினார்.

**எந்நேரத்தில் மரணம் வருமோ தெரியாது.**

புத்த பகவான் 'புண்ணியமிக்கவரே! நான் இப்போது உணவிற்காக பிண்டபாதம் செல்லும் நேரம். இப்போது தர்மம் போதிக்கும் நேரமல்ல'. என்றார். அப்போது தாருசீரிய, 'பாக்கியமுள்ள பகவானே! நான் வெகு தொலைவில் இருந்து வந்தேன். எனது உயிருக்கோ அல்லது தங்களது உயிருக்கோ ஏதேனும் ஆபத்து கூட ஏற்படலாம். அதனால் தர்மத்தினை போதித்தருளுவீராக!' என மும்முறை வேண்டி நின்றார். புத்த பகவான் இவரது பாவ புண்ணியங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தார். இவ்வாறு புத்த ஞானத்தினால் ஆராயும் போது தாருசீரிய என்பவரின் ஆயுள் மிகவும் குறுகிய நேரத்தில் முடிவுறுவதை உணர்ந்தார். ஆனால் இந்த குறுகிய

நேரத்தில் தர்மத்தினை முழுமையாக உய்த்துணரும் பாக்கியம் இவரிடம் இருப்பதனையும் உணர்ந்தார். அதனால் சீக்கிரமாக தர்மத்தினை உய்த்துணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் தர்மத்தினை போதிக்க வேண்டும் என பகவான் நினைத்தார்.

## நிரந்தரமாக விடுதலை அடைதல்

புத்த பகவான் 'புண்ணியமிகு தாருசீரிய! கண்ணால் கண்டால் கண்டது மாத்திரம் தான். செவிமடுத்தால் செவிமடுத்தது மாத்திரம் தான். நுகர்ந்தால் நுகர்ந்தது மாத்திரம் தான். சுவை அனுபவித்தால் அனுபவித்தது மாத்திரம் தான். உடலின் ஸ்பரிசம் உணர்ந்தால் உணர்ந்தது மாத்திரம் தான். நினைத்தால் நினைத்தது மாத்திரம் தான். நீங்கள் ஏதேனும் ஒன்றினை நினைத்தாலோ, எதிர்பார்த்தாலோ அல்லது ஆராய்ந்தாலோ அவை அக்கணமே முடிவுறுகிறது. அங்கு எதும் தோன்றாவிடில் நீங்கள் அங்கில்லை. அவ்விடத்தில் நீங்கள் இல்லாவிடில் அதேபோல் வேறு இடத்திலும் இல்லாவிடில் அதற்கிடையிலும் நீங்கள் இல்லை. அப்போது நீங்கள் அனைத்து துன்பங்களிலிருந்தும் முழுமையாக விடுதலை பெற்றவராவீர்கள்.' என மொழிந்தருளினார். இவ்வாறு கூறப்பட்ட வார்த்ததைளில் புதைந்திருக்கும் ஆழம் எத்தகையது என்றால் பாஹிய தாருசீரிய அவ்வார்த்தைகளை கேட்டவுடன் அவ்விடத்திலே நின்று சிந்தனை செய்வதற்கு துவங்கினார். புத்த பகவான் என்ன மொழிந்தார் என்று தன் அறிவினால் பகுப்பாய்வு செய்ய ஆரம்பித்தார். இறுதியில் அவ்விடத்திலேயெ

உன்னதமான அரஹத் நிலையையும் அடைந்தார்.

## கோழியா? முட்டையா?

சிலநேரங்களில் நாம் இங்கு வரும் புண்ணியவர்களிடம் விழிப்புணர்வு என்றால் என்ன என்று கேட்போம். அதற்கு அவர்கள் சுயவுணர்வு என பதிலளிப்பார்கள் சுயவுணர்வு என்றால் என்ன என கேட்டால் விழிப்புணர்வு என பதிலளிப்பார்கள். இதிலிருந்து தெளிவாகும் ஒரு விடயம் தான் அவர்கள் தர்மத்தினை செவிமடுத்தாலும் கேட்ட தர்மத்தினை பகுப்பாய்வு செய்வதில்லை என்பதாகும். செவிமடுத்த விடயங்களோடு திருப்தி அடைந்து விடுகிறார்களே தவிர கேட்ட விடயத்தினை ஆராய்வு செய்வதில்லை. ஆனால் பாருங்கள் ஞானமுள்ளவரது வேறுபாட்டினை, சிறு விடயமானாலும் அறிவினால் ஆராய்ந்து விபரமாக பகுப்பாய்வு செய்து இறுதியில் வாழ்வினையும் உய்த்துணர்ந்து கொள்கிறார்கள். பாருங்கள் செவிமடுப்பதன் மூலம் உன்னதமடையும் விதத்தினை. இதுதான் சவணானுத்தரியம்.

இந்த புண்ணியவர்களுக்கு நான் இப்போது இரு விடயங்களை கூறினேன். முதலாவது தஸ்ஸ னானுத்தரியம். இரண்டாவது சவணானுத்தரியம்.

## கிடைக்கும் விடயங்களில் உன்னதமானது.

மூன்றாவது இலாபானுத்தரியம். அதாவது தனக்கு கிடைக்கும் விடயங்களில் உன்னத நிலையை அடைவதாகும். சிலருக்கு பிள்ளைகள் கிடைப்பார்கள். அவ்வாறு பிள்ளைகள் கிடைத்ததும் 'இந்த உலகிலுள்ள அழகான பெயரை நான் எனது குழந்தைக்கு வைப்பேன்'

என நினைப்பார்கள். அதன் பிறகு பிறந்த நேரத்தினையும் எடுத்து கொண்டு பெயர் வைப்பதற்கு எழுத்துக்களை அறிந்து கொள்ள அங்கும் இங்கும் ஓடுவார்கள். அதன் பின்னர் ஜாதகத்தினை தயரிப்பதற்கு ஓடுவார்கள். இவ்வனைத்தினையும் செய்துகொண்டு அரும்பாடுபட்டு வளர்க்கும் பிள்ளைகளினாலே ஒருநாளைக்கு அந்த பெற்றோர்கள் துயரமும் அனுபவிப்பார்கள்.தான் அன்புடன் வளர்த்த பிள்ளைகளினாலேயே அழவும் நேரிடும். சில நேரங்களில் சில தாய்மார்கள் தான் பெற்ற பிள்ளைகளை நினைத்து துயரம் மேலிட்டு 'இந்த பிள்ளைகளை பெற்ற இந்த வயிறு கூட எனக்கு வேண்டாம்' எனக்கூறும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் அந்த குழந்தை பிறந்த அக்கணம் அவ்வாறு நினைக்கவில்லை. பெரும் பாக்கியமாகவே கருதினார்கள்.

சிலருக்கு கணவர்மார்களும் மனைவிமார்களும் கிடைப்பார்கள். அப்போது 'எனக்கு தான் இவ்வுலகில் மிகவும் நல்ல கணவன் கிடைத்திருக்கிறார்.' 'எனக்குதான் மிகவும் நல்ல மனைவி கிடைத்திருக்கிறாள்' என்று கூறிக்கொள்வார்கள். ஆனால் திருமணம் முடிந்து ஓரிரு மாதங்களில் ஒருவருக்கொருவர் முகத்தை காணக்கூட விரும்பாதவர்களாக மாறிவிடுவார்கள். என்னிடம் ஒரு தாய் 'ஐயோ சுவாமி, நான் என் கணவரை என் கண்கண்ட தெய்வமாகவே நினைத்து திருமணம் முடித்தேன். ஆனால் நான் அவரால் மிகவும் துயரங்களை அனுபவித்தேன். எனக்கு இப்போது தான் புரிகிறது. நான் தெய்வமாக நினைத்த என் கணவர் என்னுடைய சன்சார பயணத்தில் பின்தொடர்ந்து

வந்த ஒரு எதிரி என்பதை' எனக்கூறினார். பாருங்கள் அவருக்கு கிடைத்ததை. அவருக்கு அது கிடைக்கும்போது அவ்வாறு நினைக்கவில்லை. அப்போது அவர் அதனை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார். அதேபோல்தான் வீடு, வாசல், நிலம், வாகனம் என்பனவும் கிடைக்கும். கிடைக்கும் போது இன்பமாக அதனை ஏற்றுக்கொண்டாலும் போகப்போக அது பெரும் தலைவலியாக மாறிவிடுகிறது. புத்த பகவான் இவ்வாறு விபரிக்கிறார், 'இவ்வாறு கிடைக்கும் விடயங்கள் இழிவானவை, சிறுபிள்ளைதனமானவை, போதுஜ்ஜனருக்கே உரித்தானதாகும். (அனரியோ) உன்னதமற்றவையாகும். (அனத்தசங்ஹிதோ) தீமைகளை விளைவிப்பதாகும்.' என்று.

## பக்தி இல்லாவிடில் ஏழையே!

ஆனால் ஒருவருக்கு பக்தி (சத்தா) என்பது கிடைக்குமாயின் அதுதான் கிடைக்கும் விடயங்களில் உன்னதமானதாகும். எம் நாட்டில் பெரும்பாலோருக்கு இந்த பக்தி (சத்தா) எனும் விடயமென்றால் இல்லை என்றே கூறலாம். பொதுவாக எமது நாட்டில் ஒரு கருத்து உள்ளது. 'பக்தி கொண்டவன் முட்டாள், ஞானமுள்ளவன் தந்திரமானவன்' என்று. அது தவறாகும். ஒருபோதும் ஞானமுள்ளவன் தந்திரமானவனல்ல. அதேபோல் புத்த பகவான் மீது பக்தி (சத்தா) கொண்டவன் முட்டாளுமல்ல. இங்கு பக்தி எனக்கூறப்படுவது புத்த பகவானது நிகரற்ற ஞானத்தின் மீதான அசைக்க முடியாத திடகாத்திரமான நம்பிக்கையாகும். இம்மாதிரியான உறுதியற்ற, நம்பிக்கையற்ற பக்தி

இருந்தால் அதுதான் முட்டாள்தனம்.

### மர்மமான இரகசிய முறைகள் இல்லை. இங்கு அனைத்துமே வெளிப்படையானவையே!

ஒரு நாள் ஒரு பிள்ளை எனக்கு தொலைபேசியால் தொடர்பு கொண்டு பேசினாள். வர்த்தக வலயத்தில் தொழில் செய்யும் ஒரு பிள்ளை என்று தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. இந்த பிள்ளை 'சுவாமியே! எனக்கு சத்திரசிகிச்சை ஒன்று மேற்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆனால் எனக்கு அதற்கு முகங்கொடுக்க பயமாக இருக்கிறது. வேறு ஏதாவது மந்திர தந்திர மூலமாக என்னை குணப்படுத்த முடியுமா?' என்று கேட்டாள். எவ்வாறு நான் மந்திர தந்திர மூலமாக அந்த பிள்ளையை குணப்படுத்துவது? அதனால் நான் அந்த பிள்ளைக்கு கூறினேன், 'மகளே இந்த வாழ்க்கை தொடர்பாக நீங்கள் சிந்திக்கும் முறை பிழையானது.' என்று. மீண்டும் இந்த பிள்ளை என்னிடம் சத்திர சிகிச்சை இல்லாமல் மர்ம முறையில் என்னை குணப்படுத்த முடியாதா? எனக்கேட்டாள். அதற்கு நான் 'எவரும் சத்திர சிகிச்சைகள் செய்வதற்கு விரும்ப மாட்டார்கள். சத்திர சிகிச்சைகளின் போது எமது உடலை வெட்டுவார்கள், தையல் போடுவார்கள், அதேபோல் மிகுந்த வேதனை அனுபவிக்க வேண்டும். மகள், நீங்கள் மட்டுமல்ல அனைவரும் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளாது குணமடையவே விரும்புவார்கள். அவ்வாறு விரும்புவதால் அப்படி செய்ய முடியாதல்லவா? என்னால் உங்களது உடலை குணப்படுத்த முடியாது. ஆனால் உள்ளத்தை

குணப்படுத்த முடியும்'. என்று கூறினேன். நான் அவ்வாறு கூறிய விடயங்கள் அந்த பிள்ளைக்கு புரியவில்லை.

## ஞானமுள்ளவர்களின் தெரிவு

அதன் பிறகு நான், "'மகள், வேறு மதத்தை பின்பற்றும் ஒருவர் உங்களிடம், 'வாருங்கள் எங்களிடம் நாம் உங்களை குணப்படுத்துகிறோம்' என்று கூறினால் அது உங்களுடைய தேவையை பூர்த்தி செய்வதாக அமையும் தானே" என்று கேட்டேன். அதற்கு அந்த பிள்ளை எதுவும் கூறவில்லை. நான் மீண்டும், 'அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் நீங்கள் மதம் மாறுவீர்களா?' என்று கேட்டேன். நான் இந்த பிள்ளைக்கு மீண்டும் இவ்வாறு விபரித்து கூறினேன். "மகள்! தான் பின்பற்றும் சமயத்தினை உடம்பினை அடிப்படையாக கொண்டு தேர்ந்தெடுக்க வேண்டாம். அறிவை பயன்படுத்தி தெரிவு செய்யுங்கள். எவராயினும் 'உங்களது நோயை குணப்படுத்துகிறேன்' என்று ஏமாற்ற முடியும். அவ்வாறு ஏமாற்றி அவர்களது கட்டுப்பாட்டில் உங்களை வைத்திருக்கவும் முடியும். 'நீங்கள் வாக்களித்துள்ளீர்கள் அந்த உறுதி மொழியை மீறினால் உங்களுக்கு துன்பம் மேல் துன்பம் தான் வரும்' என்று கூறி மென்மேழும் அந்த சமயத்திலேயே உங்களை சிறைப்படுத்தி வைக்கலாம். அதனால் அந்த நிலைக்கு நீங்கள் ஆளாக வேண்டாம்" என்று கூறினேன். அதை கூறிவிட்டு அந்த பிள்ளையின் முகவரியை பெற்றுக்கொண்டு பிரித் செய்யப்பட்ட நூல் ஒன்றினை தபாலில் அனுப்பி வைத்தேன்.

## ஏமாற வேண்டாம்.

பக்தி (சத்தா) அற்றவர்களின் கதியை பாருங்கள். அவர்கள் தர்மம் எதற்காக உள்ளது என்று கூட தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தம்மை பௌத்தர்களாக அறிமுகப்படுத்தி கொள்பவர்கள். இவர்களை எளிதாகவே ஏனையோர்களால் ஏமாற்ற முடியும். பாருங்கள் கிடைக்கும் விடயங்களில் உன்னதமான விடயம் கிடைக்காவிட்டால் எவ்வளவு நஷ்டம் என்று.

ஒருநாளும் நோயுறாத வண்ணம் இந்த உடலை வைத்திருக்க முடியுமா? முடியாது. எம்மனைவருக்கும் கட்டாயம் நோய்கள் ஏற்படும் பெரும்பாலும் அந்த நோய்களின் காரணமாகவே எமது மரணமும் நிகழும். எம் அனைவருக்குமே என்றாவது ஒருநாள் குணப்படுத்த முடியாத நோய்கள் ஏற்படும். அந்த நோய்கள் ஏற்படட்டவுடன் எந்த மருத்துவத்தினாலும் குணப்படுத்த முடியாமலும் போய் அதன் காரணமாகவே மரணித்தும் போகலாம். ஒருவர் உள்ளம், உள விருத்தி, குணநலன்கள், ஞானம் என்பவை தொடர்பாக சிந்திக்காமல் இவற்றை தம் வாழ்விலிருந்து தூக்கி வீசிவிட்டு இந்த உடலை மாத்திரம் கவனத்திற்கொண்டு வாழ்வாராயின் அவருக்கென்றால் இந்த பக்தி எனும் அரிய விடயம் கிடைக்காது போய்விடும்.

## நோயற்ற வாழ்வு எப்போதும் இருக்குமா?

நாம் இவ்வாறு நினைப்போம். ஒருவர் இவ்வாறு கூறுகிறார் “வாருங்கள் நான் உங்களது எல்லா

நோய்களையும் குணப்படுத்துகிறேன்” என்று. பிறந்த உயிர்கள் நோயுறும் என்பதனை உணராத ஞானமற்ற ஒருவர் அந்த கூற்றுக்கு ஏமாறுவார். ஆனால் பிறந்த உயிர்கள் நோயுறும் இயல்பினை கொண்டுள்ளன. அதனை நிறுத்த முடியாது, என உணர்ந்த ஒருவருக்கு தடிமன் போன்ற நோய் ஏற்பட்டால் கொத்தமல்லி போன்ற மூலிகைகளை பயன்படுத்தவும் அதைவிட பெரிய நோய்கள் ஏற்பட்டால் மருந்து மாத்திரைகளை எடுக்கவும் முடியும். அவ்வாறில்லாது மந்திர தந்திரங்களை தேடியலைய மாட்டார்.

## நோயுறும் துன்பம் அனைவருக்கும் பொதுவானதே!

புத்த பகவானுக்கு வயிற்று கோளாறு ஒன்று ஏற்பட்டது. ஆனந்த பிக்கு அவர்கள் அதனை ஜீவக வைத்தியரிடம் தெரியப்படுத்தினார். ஜீவக வைத்தியர் மூன்று நீல அல்லி மலர்க்கட்டுக்களை புத்த பகவானிடம் கொடுத்தார். கொடுத்து, ‘பாக்கியமுள்ள புத்த பகவானே! இந்த நீல அல்லி மலர் கொத்துக்களிலிருந்து ஒரு மலர்கொத்தினை ஒரு முறை நுகர்ந்து பாருங்கள், அப்போது ஒரு முறை வயிற்றுப்போக்கு ஏற்படும். அதன்பின் இரண்டாவது மலர்கொத்தினை ஒரு முறை நுகர்ந்து பாருங்கள், அப்போது இரண்டாவது முறையாகவும் வயிற்றுப்போக்கு ஏற்படும். மீண்டும் மூன்றாவது மலர்கொத்தினை ஒரு முறை நுகர்ந்து பாருங்கள், அப்போது மூன்றாவது முறையாகவும் வயிற்றுப்போக்கு ஏற்படும்’ என்று கூறி மூன்று நீல அல்லி மலர் கொத்துக்களையும் கொடுத்தார். பாருங்கள் புத்த பகவானும் மூலிகைகளை பயன்படுத்தியுள்ளார்.

**கானல் நீருக்கு ஏமாறுவது போல் ஏமாற வேண்டாம்.**

சாதாரண மக்கள் மர்ம முறைகளில் நோய்களை குணப்படுத்த சிந்திக்கும் போது இந்த உடலை அவர்கள் நித்தியமானதாகவே பார்ப்பார்கள். அவர்களுக்கு ‘இந்த உடல் மண்ணாகும் இயல்பினை கொண்டது’ எனும் விடயம் மறந்து போகும். இந்த உடல் துர்நாற்றம் வீசி அழிந்து போகும் ஒன்று எனும் விடயம் மறந்துவிடும். இந்த உடலில் இருப்பது மிகவும் அருவருப்பான விடயங்கள் என்பதனை அறியாதவராகி விடுவாரகள். இறுதியில் அவருக்கு பக்தி எனும் அரிய விடயம் நிலைக்காமல் போய்விடும். அதற்கு காரணம் என்ன? அவருக்கு வாழ்க்கை தொடர்பான புரிந்துணர்வு இல்லாமையே ஆகும். அதனால் எவராவது நோய்களை குணப்படுத்துவேன் என்று கூறினால் அவர் பின்னே ஓட வேண்டியதுதான்.

**மும்மணிகளை சரணடைந்து இறந்து சுவர்க்கத்தில் பிறப்பேன்.**

மனிதர்கள் அறிவற்றவர்களாக இருப்பது அழிவையே உண்டாக்கும். முதலாவது இழப்பு தனக்கு தான் ஏற்படும். அதற்கு காரணம். வேண்டிய நேரத்தில் ஏமாறுவதற்கு தான் தயாராக இருப்பதே ஆகும். காரணம்? அறிவினை பயன்படுத்த முடியாமையே! அறிவினை பயன்படுத்துபவருக்கு தெரியும் ‘இறந்தாலும் பரவாயில்லை. நான் மும்மணிகளை சரணடைநதுள்ளேன். அதனால் சுவர்க்கத்திலேயே பிறவி எடுப்பேன்.’ என்று. இதுதான் பக்தி எனும் இலாபம். பக்தி என்பது உன்னதமான இலாபமாகும். கிடைக்கும் விடயங்களில் உன்னதமானது புத்த பகவானின் நிகரற்ற ஞானத்தின்

மீது கொண்டுள்ள அசைக்க முடியாத திடகாத்திரமான நம்பிக்கையேயாகும். பாளி மொழியில் சத்தா எனப்படுவது இவ்வகையான பகத்தியாகும். இந்த பக்தியானது கண்மூடித்தனமானது அல்ல.

பக்தி (சத்தா) கொண்டவனது அடையாளம் தான் அவர் புத்த பகவானது குணங்கள் சத்தியமே என ஏற்றுக்கொள்வார். அவர் மொழிந்த தர்மத்தினை செவிமடுக்கும் போது இது உண்மையே என உணர்ந்து கொள்வார்.

நான் அண்மையில் ஒருநாள் களுத்துரை பிரதேசத்திற்கு தர்ம போதனை ஒன்றிற்காக சென்றிருந்தேன். ஒரு பத்திரிக்கையில் பின்புறத்தில் ஒரு மனிதர் விளக்கொன்றினை கையிலேந்தி கொண்டு இருக்கும் ஒரு படம் போடப்பட்டிருந்தது. அது ஒரு விந்தையான விளக்கு ஒன்று என்றும் குறிப்படப்பட்டிருந்தது. அலடினின் புதுமை மிக்க விளக்கை தான் கையில் வைத்திருந்திருந்தாரோ என்று எனக்கு தெரியாது. மேலும் அந்த படத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டடிருந்தது. விளக்கை கையிழேந்தி இருக்கும் இந்த படத்தை வீட்டில் ஓரிடத்தில் பொருத்தி ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் கௌரவத்துடன் அதன் முன்னின்று ‘இதிபிசோ பகவா’ (புத்த பகவானது குணங்கள் கொண்ட செய்யுள்) எனும் செய்யுளை சொல்ல வேண்டும்.’ என்று. ஆயிரக்கணக்கான மக்கள் சனிக்கிழமைகளில் அவர் நடத்தும் பிரசங்கங்களுக்கு செல்கின்றனர். இதனை கண்டவுடன் எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ஏன் ஏனையோரை

இப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. கேட்கும் மனிதர்களுக்கு சிந்திக்கும் திறமை இல்லை என்றே வைத்துக்கொள்வோம். இவ்வாறு இருக்கும் அப்பாவி மக்களை ஏமாற்றுவது ஒரு மனிதாபிமான காரியமா? இல்லை. நாம் மாறாக அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? சிந்திக்கும் திறமையை வளர்க்க உதவி செய்ய வேண்டும்.

## ஒரு நாளும் முட்டாளாக வேண்டாம்.

நாம் இவ்வாறு நினைத்து பார்ப்போம். ஒருவர் இருக்கிறார். அவர் ஒரு போதுஜ்ஜனர். அதாவது தர்மம் என்றால் என்னவென்பதே அறியாத மும்மணிகளை அறியாத, வாழ்வின் யதார்த்தத்தை அறியாத ஒருவர். நாம் அவரை தர்மத்தில் ஈடுபட வைப்பதற்காக தர்மத்தினை அவர் இருக்கும் நிலமைக்கு கொண்டு வருவது சிறந்த விடயமா? அவ்வாறு செய்வதால் இவர் இருக்கும் போதுஜ்ஜனர் எனும் நிலையிலிருந்து மீளுவாரா? ஒருபோதும் இல்லை. ஆனால் புத்த பகவானது தர்மம் என்பது ஆரிய தர்மம். அதாவது உன்னத மிகுந்த தர்மம். உன்னத தர்மமானதால் நாம் போதுஜ்ஜனரை உன்னத நிலைக்கு கொண்டு வரவே முயற்சி செய்ய வேண்டும். தர்மத்தினை கீழ் நிலைக்கு தள்ளாது தர்மத்தின் உயர் தரத்திற்கு ஏற்றபடி மனதனின் அறிவினை வளர்க்க வேண்டும். இதுதான் மனிதர்களுக்கு செய்யும் கௌரவமாகும்.

நான் மேற்கூறிய சம்பவத்தில் என்ன நடக்கிறது? ஒருவர் தன்னை ஒரு உன்னத மிகுந்த ஒருவராகவும் தன்னை ஏனையோர் சரணடையும் படியாகவும் நடித்து

அப்பாவி மக்களின் அறியாமையை தனக்கு சாதமாக பயன்படுத்தி கொள்கிறார். இவ்வாறு அறியாமையால் ஏமாற்றப்படும் போது அவர்கள் ஒருபோதும் அறிவாளிகளாக மாட்டார்கள். இந்த உடலின் மீது மோகம் கொண்டவர்களாக இருப்பார்களே தவிர எண்சீர் மார்க்கத்தையோ அல்லது நாற்பேருண்மைகளையோ கொண்ட தர்மத்தினை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவ்வாறு ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும் அவர்களுள் தோன்றாது. பாருங்கள் இப்படிப்பட்டோருக்கு புத்த பகவானது தர்மம் மீதான பக்தி ஏற்படாது. அவர் மர்மமான விடயங்களிலேயே சிக்கி விடுவார். அதன் பிறகு அதனிலிருந்து விடுதலை அடைய முடியாது போய்விடும். இவற்றை தவிர வேறொன்றும் இடம்பெறாது.

### ஒப்பற்ற புத்த குணங்களையே நினைவு கூற வேண்டும்.

புத்த பகவானது தர்மத்தின் மீது பக்தி இருக்கும் ஒருவர் புத்த பகவான் அரஹங் குணம் படைத்தவர் என்பதனை ஏற்றுக்கொள்வார். அரஹங் எனப்படுவது மனமாசுகள் (ஆசை, கோபம், அறியாமை) இல்லை என்பதாகும். புத்த பகவான் சம்மாசம்புத்த குணம் படைத்தவர் அதாவது தன் சுயமான ஞானத்தினால் நாற்பேருண்மைகளை உய்த்தறிந்தார். என்பதனையும் ஏற்றுக்கொள்வார். இவ்வாறு தன் சுய ஞானத்தினால் உய்த்தறிந்த ஞானத்திற்கேற்ப உன்னதமான சீலத்துடனும் சமாதியுடனும் தம் வாழ்வை நடத்தியவர் அதாவது விஜ்ஜாசரண சம்பண்ண குணம் படைத்தவர். தெளிவான சுந்தரமான பாதையான எண்சீர் வழியில்

பயணித்து பரம சுந்தமான மோட்சத்தினை அடைந்தவர் அதாவது சுகத குணம் படைத்தவர். புத்த பகவானது ஒப்பற்ற ஞானத்திற்கு உலகில் மறைந்தவை எதுவுமே இல்லை. அனைத்து விடயங்களுமே அவர் அறிந்திருந்தார். தேவ உலகங்கள், பிரம்ம உலகங்கள், நரகம் பிரேத உலகம், மிருக உலகம் , மனித உலகம் எனும் அனைத்து உலகங்களினதும் உண்மை நிலையை உய்த்தறிந்தவர். லோகவிதூ எனும் குணம் படைத்தவர். ஏனையோரை கட்டுப்படுத்துவதில் உன்னதமானவர் அனுத்தரோ புரிசதம்மசாரதீ எனும் குணம் படைத்தவர். தேவர்களதும் மனிதர்களதும் நிகரற்ற குருவானவர். சத்தா தேவமனுஸ்ஸானங் எனும் குணம் படைத்தவர். மகா கருணை கொண்ட புத்த எனும் குணம் படைத்தவர். உலகிலுள்ள அனைத்து விதமான உத்தம குணங்களையும் தன் ஒருவருள்ளே கொண்டிருக்க தகுதியானவர் பகவா எனும் குணம் படைத்தவர். புத்த பகவானது இவ்வனைத்து குணங்களும் ஒப்பற்றவையாகும். இவ்வாறாக புத்த பகவானது அனைத்து குணங்களையும் புத்த பகவானது தர்மம் மீது பக்தி கொண்ட ஒருவர் ஏற்று கொள்வார்.

புத்த பகவானது காலத்தில் ஒரு தம்பதியினர் இருந்தனர். அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. நீண்ட நாட்களுக்கு பின் அவர்களுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் அந்த குழந்தைக்கு 'பத்ர' எனப்பெயர் சூட்டினர். இந்த பெற்றோர் மிகுந்த பாசத்துடன் இந்த குழந்தையை வளர்த்தனர். ஒருபோதும் கீழே இறக்கவில்லை. ஒரு நாள் இந்த பெற்றோர்கள் 'எமது இந்த பிள்ளை செல்வத்திற்கு ஒரு போதும்

அழியாத ஒன்றை அளிக்கவேண்டும்' என நினைத்தனர். நாமென்றால் எமது பிள்ளைகளுக்கு மணம் முடித்து கொடுப்போம். அவ்வாறு திருமணம் முடிப்பவர் மரணிப்பதில்லையா? அழிந்து போவதில்லையா?. அதனால் இந்த பெற்றோர்கள் அழியாத ஒன்றை கொடுக்க வேண்டும் என நினைத்து அவர்களிருவரும் புத்த பகவானிடம் தம் ஒரே மகனை அழைத்து சென்றார்கள். அழைத்து சென்று புத்த பகவானிடம் 'பாக்கியமுள்ள பகவானே! நாம் அரும்பாடுபட்டு இந்த குழந்தை செல்வத்தை பெற்றெடுத்தோம். இவருக்கு இப்போது ஏழு வயதாகிறது. இவன் மிக மிக மென்மையானவன். மிகவும் சுகத்துடனேயே இவனை வளர்த்தெடுத்தோம். அதனால் நாம் இவனுக்கு ஒருபோதும் அழியாத ஒன்றை கொடுக்க நினைத்தோம். அதனை பகவானுக்கு மாத்திரம் தான் செய்ய முடியும். அதனால் பாக்கியமுள்ள பகவானே! இந்த குழந்தையை தங்களது சீடராக ஏற்றுக்கொள்வீராக!' என்று கூறி புத்த பகவானிடம் அந்த குழந்தையை ஒப்படைத்தனர்.

## ஏழு வயது குழந்தையும் அரஹத் நிலையை அடைந்தது.

புத்த பகவான் அந்த குழந்தையை ஏற்றுக்கொண்டு ஆனந்த தேரரிடம் 'புண்ணியமிகு ஆனந்த இந்த குழந்தையை உடனே பிக்கு துறவு பூணச்செய்யுங்கள். இந்த குழந்தை ஒரு மகா புருஷோத்தமர் ஆவார்.'என கூறினார். ஆனந்த தேரரும் இந்த குழந்தையை காலை வேளையில் துறவு பூணச்செய்தார். அன்று நண்பகல் வேளையில் அக்குழந்தை உன்னதமான

அரஹத் நிலையை எய்தினார். மாலைப்பொழுதில் புத்த பகவான் 'புண்ணியமிகு பத்ர! இங்கு வாருங்கள்' என அழைத்தார். அதுவே அவரது உபசம்பதாவாக அமைந்தது. பாருங்கள்! புண்ணியவர்களே! ஏழு வயது குழந்தையின் திறமையை. புத்த பகவானது 'அனுத்தரோ புரிசதம்மசாரதி' எனும் குணம் என்பது சிறிய விடயமா? இல்லை. எமக்கு ஏழு வயது குழந்தை ஒன்றுக்கு சோறு ஒருபிடி ஊட்டிக்கொள்ள முடியாது. அந்த சோற்றுப்பிடியை ஊட்டுவதற்கு எத்தனை பொய்கள் சொல்லுகிறோம்? இந்த விடயத்திலிருந்தும் எம்மால் புத்த பகவானது 'அனுத்தரோ புரிசதம்மசாரதி' எனும் குணத்தின் மகிமையை உணர்ந்து கொள்ளக்கூடியாதாக இருக்கிறது.

## இவை தொடர்பாக சந்தேகம் ஏற்படுத்தி கொள்ளாதீர்கள்.

புத்த பகவான் மீது பக்தி கொண்ட ஒருவருக்கு இவற்றை கேட்டாலும் சந்தோஷம்தான். அவர் புத்த பகவானது குணங்களை நினைவு கூறுவார். புத்த பகவானது ஒரு குணம் தான் ஸத்தா **தேவமனுஸ்ஸானங்** எனப்படுவது. அதன் பொருள்தான் புத்த பகவான் அறிவுள்ள தேவர்களினதும் மனிதர்களினதும் பரம குருவானவர் என்பதாகும். இதனை அறியாத மூட மக்கள் 'தேவர்களுக்கு தர்மத்தினை உய்த்துணர முடியாது' என்று கூறி புத்த பகவானது உன்னத குணத்தை இழிவுபடுத்துகின்றனர். தேவர்களுக்கு தர்மத்தினை உய்த்துணர முடியாவிடில் புத்த பகவான் எவ்வாறு தேவர்களினதும் மனிதர்களினதும் பரம குருவாவார். பக்தி கொண்டவர் ஞானமுள்ளவரே.

அவர் சரியான முறையில் சிந்திப்பார். புத்த பகவான் தேவலோகத்திற்கு கடினமான உடலோடும் செல்வார். மனோமய உடலினாலும் செல்வார். அதனை புத்த பகவானே போதித்துள்ளார். புத்த பகவான் சில சமயங்களில் தேவர்களாளும் தம்மை இணங்கான முடியாத படியாக தேவர்கள் மத்தியிலிருந்து தேவர்களுக்கு தர்மத்தினை போதிப்பார்.

## மோட்சத்தினை உறுதி செய்த தேவர்கள்.

தேவர்கள் தான் புத்த பகவானிடம் மங்கள விடயங்களை கேட்டிருக்கிறார்கள். பராபவ சூத்திரம், வசல சூத்திரம் எனும் சூத்திரங்கள் தேவர்கள் வினவிய வினாக்களுக்கு விடையாக போதிக்கப்பட்வையாகும். புத்த பகவானது தர்மம் மனிதர்கள் மத்தியில் மேலோங்க தேவர்கள் மிகவும் முயற்சி செய்திருக்கிறார்கள். தர்மத்தினை உய்த்துணர்ந்த எண்ணற்ற தேவர்கள் இருக்கின்றனர். பெரும்பாலான தேவர்கள் புத்த பகவானிடம் வந்து தர்மத்தினை செவிமடுத்து மோட்சத்தினை உறுதி செய்திருக்கின்றனர்.

ஒரு நாள் ஒரு தேவன் புத்த பகவானிடம் தர்மத்தினை செவிமடுக்க வந்தார். இவர் புத்த பகவானை கண்டதும் தன்னிலை மறந்தார். தான் இப்போது என்ன செய்ய வேண்டும் என்பதனையும் மறந்துவிட்டார். நிலத்தில் நிற்க முயற்சித்தாலும் அவரால் நிற்க முடியவில்லை. எண்ணையை நிலத்தில் இட்டது போல் நிலத்திற்குள் மூழ்கி விடுகிறார். புத்த பகவான் இதனை கண்ணுற்று 'புண்ணியமிகு தேவனே! விரைவாக கடினமான உருவத்தை தோற்றுவித்து கொள்ளுங்கள்.' என்றார்.

அதனை செவிமடுத்த பின்புதான் அந்த தேவனுக்கு சுய உணர்வு வந்தது. புத்த பகவான் பார்க்கும் போது தேவர்களும் தன்னிலை மறந்திருக்கிறார்கள்.

## முழு உலகிற்கே

பத்தாயிரம் உலக மண்டலத்திற்கும் ஒரே ஒரு புத்த பகவான் தான் தோன்றுவார். நான்கைந்து புத்தர்மார்கள் ஒரே சமயத்தில் தோற்றம் பெற மாட்டார்கள். அதனால் இவ்வுலகத்தோருக்கு இருக்கும் மிக அரிதான அதிஷ்டம் தான் அவ்வாறு தோன்றும் புத்த பகவான் மீது பக்தி கொள்ளுதல் என்றால் அது மிகையாகாது.

பக்தி எனும் இலாபம் இருக்கும் ஒருவர் புத்த பகவானை நினைவு கூறுவார். அதுமட்டுமல்ல தர்மத்தினையும் நினைவு கூறுவார். முழுமையாக போதிக்கப்பட்ட இந்த தர்மத்தில் அடங்கியுள்ளது என்ன? நால்வகை விழிப்புணர்வுகள் (சத்தாரோ சதிபட்டானோ) நான்கு வகையான வீரியம், நான்கு வகைப்பட்ட இத்தி பாதங்கள், பஞ்ச இந்திரியம், பஞ்ச பலம், எழுவகை போதி அங்கங்கள், எண்சீர் மார்க்கம். இவற்றையே புத்த பகவான முழுமையக போதித்தார். இந்த தர்மத்தில் தனது உடம்பினை அசுபமான ஒன்றாக நினைத்து செய்யும் தியானங்கள், தனது உடலை நால்வகை தாதுக்களாக பார்க்கும் தாது மனசிகார தியானம், ஒரு பிணத்திற்கு உவமை படுத்தி செய்யும் நவசீவதிக தியானம் போன்ற தியானங்களும் அடங்குகின்றன.

## இரும்பின் துருவே இரும்பை அழிக்கும்.

நம் நாட்டு மக்கள், ‘ஐயோ!..இந்த மாதிரியான

தியானங்கள் இல்லற வாழ்வினை வாழ்வோர் செய்ய கூடாது. இல்லற வாழ்வினை வாழ்வோர் எப்படி வீடுபேறு அடைய முடியும்? இவற்றை செய்யாதீர்கள் குடும்பங்களை கலைந்துவிடும், தியானம் செய்யாதீர்கள் பைத்தியம் பிடிக்கும்' என்றெல்லாம் கூச்சலிடுகிறார்கள். குடும்பங்கள் களையுமென்றால், தியானம் செய்து பித்து பிடிக்குமென்றால் அது முழுமையாக போதிக்கப்பட்ட தர்மமா? இல்லையே. இப்படிப்பட்டவருக்கு பக்தி எனும் இலாபத்தை உருவாக்கி கொள்ள முடியாது. இல்லறத்தோர் மட்டுமல்லாது சீவரம் தரித்த சில பிக்குமாரும் இப்படி கூறுகிறார்கள். இவர்களால் ஒருபோதும் புத்த பகவானது தர்மத்தின் மீது பக்தியை ஏற்படுத்தி கொள்ள முடியாது.

**இப்படிப்பட்டவர்களும் இருக்கிறார்கள்.**

நான் ஒருநாள் தர்ம போதனை ஒன்றிற்கு சென்று அசுப தியானத்தை கற்றுகொடுத்தேன். அந்த போதனையின் இறுதியில் ஒருவர் என்னிடம் வந்து இவ்வாறு கூறினார். "சுவாமியே! ஒருவர் என்னிடம் வந்து கூறினார், 'அசுப தியானத்தை மட்டும் செய்துவிடாதீர்கள். திருமணம் முடித்த ஒருவர் இந்த தியானத்தை செய்தால் அந்த குடும்பம் பாழாகிவிடும்.' என்று. அப்படியாயின் இந்த தர்மம் பரிபூரணமாக போதிக்கப்பட்டதல்லவே. நான் அவரிடம் இவ்வாறு கூறினேன். 'நீங்கள் கூறுவது மிகவும் புதுமையான விடயமல்லவா? பத்து பதினைந்து நிமிடம் ஒருவர் கண்களை மூடி அசுப தியானத்தை செய்து குடும்பம் பாழாகிவிடுமென்றால், உயர்தரம் படிக்கும் பிள்ளைகளை வைத்திய கல்லூ

ரிக்கு அனுப்பாதீர்கள். ஏன் சிறிது நேரம் கண்களை மூடி அசுப தியானத்தை செய்வதால் குடும்பம் பாழாகிவிடுமென்றால் அங்கு சென்று பற்களை சுத்தம் செய்யும் போது வாய் நாற்றம் வீசும், அழுகிய பிணங்களை வெட்டி பரிசோதனை நடத்த வேண்டும். நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சைகளை செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் கண்களால் பார்த்து குடும்பம் பாழாகிவிடுமென்றால் அனைவரும் துறவு பூணுவார்கள். அதனால் வைத்திய கல்லூரிகளுக்கு பிள்ளைகளை அனுப்பாதீர்கள்' என்று கூறினேன்.

இந்த உடலின் உண்மை நிலையை கண்ணால் பார்ப்பதினால் ஒன்றும் இவ்வாழ்க்கை வெறுத்து விடாது. குறைந்த பட்சத்தில் வைத்தியசாலைகளில் தொழில் புரிவோர் 'நாமும் ஒரு நாள் மரணிப்பவர்கள்' என்பதனை உணர்ந்தாலாவது செனல் கட்டணத்தையாவது குறைப்பார்கள். மருந்துகளும் இவ்வளவு விலையேறாது. வைத்தியரிடம் ஒரு நோயாளி வந்தால் அந்த நோயாளியை இரண்டு நிமிடங்கள் கூட பரிசோதனை செய்யவதில்லை. அடுத்த நோயாளியை பரிசோதிப்பதற்கு முற்படுவார். இந்த அசுபம் தொடர்பாக அவர் அறிந்திருந்தால் 15 நிமிடமாவது ஒரு நோயாளியை பரிசோதிப்பார். கருணையுடன் மருந்து கொடுப்பார். வேலை நிறுத்த போராட்டங்களை செய்ய மாட்டார். நோயாளிகள் மீது கருணை கொண்டு அன்புடன் பராமரிக்கும் வைத்தியர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் 5% போன்ற மிகவும் குறைந்த எண்ணிக்கையானோரே

## அசுபமான விடயங்கள் அசுபமானவையே!

நாம் அசுப தியானத்தை சற்று நேரம் செய்வதால் வாழ்க்கை வெறுத்துவிடுமா? இல்லை. நான் அவருக்கு புரியும் படியாகவே கூறினேன். 'சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டு முடி, மயிர், நகம், பற்கள்' இவை அழுக்காகும்' என்பதனை நினைவுகூறுவது தகாது என்றால், நீங்கள் மலசலகூடத்திற்கும் செல்ல வேண்டாம். ஏன் அங்கு போனதும் தன்னுடைய அசுபமான விடயத்தைதானே காண வேண்டும்.' என்று. இவ்வாறு கூறியவுடன் தான் அவர் அதர்மத்தின் இயல்புகளை உணர்ந்து கொண்டார். 'ஆ! அசுப தியானத்தை செய்ய கூடாது' என்று. இவ்வளவு நேரமும் அவர் எதனை தூற்றி பேசினார்? புத்த பகவானது தர்மத்தினையே! நாம் நினைத்தாலும் இல்லாவிடிலும் தியானம் செய்தாலும் செய்யாவிடிலும், அது தொடர்பாக பேசினாலும் இல்லாவிடிலும் அசுபமான விடயம் அசுபமே. இது தான் சத்தியம்.

## உடம்பிற்கு ஏமாறாதீர்கள்.

இப்போது நீங்கள் நினைத்து பாருங்கள். மூன்று நாட்களுக்கு தொடர்ந்து நாம் பற்களை துலக்காது இருக்கிறோம் என்று. எம் வாய் நாற்றத்தை எம்மால் பொறுத்து கொள்ள முடியுமா? முடியாது. எவருடனாவது எம்மால் பேச முடியுமா? முடியாது. மூன்று நாட்களுக்கு முகம் கழுவாமல் குளிக்காமல் இருந்தால் எவ்வளவு நாற்றமாக இருக்கும் என்று. நாம் இவ்வாறு நினைத்து பார்ப்போம். நாம் உண்ணும் உணவில் எமது தலையில் இருக்கும் ஒரு முடி இருந்ததென்று. அதனை

கறிவேப்பிலையை ஒதுக்கி வைப்பதை போல் பீங்கானில் ஒரு புறத்தில் வைத்துக்கொண்டு எம்மால் சாப்பிட முடியுமா? முடியாது. தர்மம் என்றால் என்னவென்பதை அறியாத ஒருவர் கூட அப்படி செய்ய மாட்டார். இதன் மூலம் நாம் அசுபமானவை அசுபமானவையே என்பதை உணரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இந்த உண்மையை உணர முடியாதவர்கள பக்தியை ஏற்படுத்தி கொள்ள முடியாது.

## உங்கள் உள்ளத்திலிருக்கும் பகைமை உங்களையே அழிக்கும்.

'மாகந்தியா' அரசிக்கு ஏற்பட்ட நிலையை அறிவீர்கள் தானே. புத்த பகவான் இவ்வுடலை ஒரு மலம் நிரப்பிய ஒரு மட்பாத்திரத்திற்கு உவமித்துள்ளார். அது அசத்தியமா? இல்லையே. மாகந்தியா தன் உடலை சாரமானதாக நினைத்தாள். அதனால் புத்த பகவான் மீது பகைமை கொண்டாள். ஆனால் அவளது பெற்றோர் சத்தியத்தை உணர்ந்தனர். அவர்கள் இறுதியில் வீடுபேற்றினையும் அடைந்தனர். ஒருவருக்கு பக்தி உருவாக வேண்டுமாயின் அவருக்கு புத்த பகவான் மீது, தர்மத்தின் மீது மற்றும் ஆரிய சங்கத்தினர் மீதுதான் பக்தி உருவாக வேண்டும்.

## இன்னும் முட்டாள்தனத்திற்கு மருந்து கண்டுபிடிக்கவில்லையே!

ஒருநாள் ஒரு தாய் என்னிடம், 'நீங்கள், சன்சாரத்தில் பயணிக்க வேண்டாம் என்று கூறுகிறீர்கள். அப்படியென்றால் புத்த பகவான் கூட இந்த சன்சாரத்தில் பயணித்தவர் தானே! அப்படியாயின் நாம் பயணித்தால் என்ன?' என்று கேட்டார். பாருங்கள், இந்த கேள்வியை

என்னிடமே வந்து கேட்கிறாரே! நான் 'சரி நீங்கள் பயணியுங்கள்..' என்று கூறினேன். அவ்வாறு கூறவும் தேவையில்லை. எப்படியும் பயணிப்பார்கள். 'ஐயோ! சன்சாரத்தில் பயணிக்க வேண்டாம்' என இழுத்து எம்மால் நிறுத்த முடியாதல்லவா? தர்மத்தில் பிறப்பு இறப்பு எனும் சன்சாரத்தை ஒரு பயங்கரமான வெள்ளப்பெருக்கிற்கு உவமை படுத்தியே புத்த பகவான் மொழிந்துள்ளார். பயங்கரமான வெள்ளத்தில் அடித்து செல்லும் ஒருவர் நாம் கூறினாலும் இல்லாவிடிலும் அடித்தே செல்லப்படுவார்.

**சன்சாரத்தில் பயணிப்பது மிக மிக இலகுவானதாகும்.**

நான் கூறினேன், 'நீங்கள் சன்சாரத்தில் பயணிக்க வேண்டுமாயின் ஒரு சிறு விடயம் தான் செய்ய வேண்டும். ஆசையை தோற்றுவிக்கும் காமத்தினை தோற்றுவிக்கும் எண்ணங்கள் மனதில் எழும் போது அவற்றை தடை செய்யாதீர்கள். பொறாமை, பழிவாங்கும் குணம், குரோதம், அகந்தை, பகைமை எனும் குணங்களை நன்றாக மனதில் தேக்கி வைத்து கொண்டு நன்றாக சாப்பிட்டு, குடித்து, நன்றாக நித்திரை செய்து கொண்டிருங்கள். இவற்றை தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் உங்களுக்கு சன்சாரத்திலே பயணித்து கொண்டிருக்கலாம். எவ்விதமான தடையும் இல்லை' என்று கூறினேன்.

நாம் எமது வாழ்வில் மேற்கூறிய விடயங்களுக்கு மாறுபட்ட விடயங்களை தோற்றுவிக்கவே முயற்சி செய்கிறோம். மேலும் நான், 'மோட்சத்தினை நீங்கள் விரும்பாவிட்டால் சன்சாரத்திலேயே பயணிக்க

வேண்டுமாயின் இவற்றை செய்து கொண்டிருங்கள்.' என்று கூறினேன். பாருங்கள் பக்தி என்பது கடுகளவேனும் இருக்கிறதா? என்று.

**அடித்தளம் உறுதியானதாக இருக்க வேண்டும்.**

பக்தி என்பது சிறு விடயமல்ல. அது வாழ்வின் மிகப்பெரியதொரு உந்துதலாகும். அந்த உந்துதல் பக்தியினாலேயே துவங்குகிறது. அதுதான் 'சத்தானுசாரி' எனப்படுகிறது. பக்தியை அடிப்படையாக கொண்டுதான் துக்கத்திலிருந்து மீளலாம். பக்தி இல்லாவிடில் வாழ்வினை உய்த்துணர முடியாது. பக்தி உள்ளவர் புத்தர் ஒரு சம்மாசம்புத்த பகவான் என்பதனை அறிவார். மோட்சத்திற்கான இந்த தர்மத்தினால் நாற்பேருண்மைகளை உய்த்துணரலாம் என்பதனையும் இந்த தர்மத்தில் பயணித்து மோட்சத்தினை உறுதி செய்த புத்த சீடர்கள் இருந்தார்கள். என்பதனையும் ஏற்றுக்கொள்வார். அதேபோல் நானும் இந்த தர்மத்தின் படி வாழ்ந்தால் என்னாலும் அந்த வீடுபேற்றினை அடைய முடியும் என்பதனையும் ஏற்றுக்கொள்வார். இந்த பக்தியை அடிப்படையாக கொண்டு அவர் தர்மத்தை ஏற்று அதன்படி தன் வாழ்வினை நடத்துவார். இவ்வாறானவரே சத்தானுசாரி என அழைக்கப்படுவார். இந்த சத்தானுசாரியானவர்தான் தம்மானுசாரி எனும் நிலையை அடைவார். அதாவது அவர் முன்பை விட மென்மேழும் தர்மத்தினை பழக்கப்படுத்துவார். அநித்தியமானதை அநித்தியமானதாகவும் துக்கத்தை துக்கமாகவும் அறிவால் ஆராய்வார். தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத விடயங்களை

தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாதவையாகவே (அநாத்மமாகவே) அறிவால் ஆராய்ந்து கொண்டிருப்பார். இவ்வாறாக தர்மத்தினை பழக்கப்படுத்தும் தம்மானுசாரி நிலையில் உள்ளவரே சோதாபண்ண நிலையை அடைவார்.

## இவற்றை ஏன் பாராட்டுகிறீர்கள்.

அடுத்த விடயம் தான் சிக்கானுத்தரியம். அதாவது கற்றுக்கொள்ளும் விடயங்களில் உன்னதத்தை தருவது. நாம் பல விடயங்களை கற்றுக்கொள்கிறோம். கணிணி தொடர்பாக கற்கிறோம், சமையல் முறைகளை கற்றுக்கொள்கிறோம், தையல் முறைகளை கற்றுக்கொள்கிறோம், விவசாயம் செய்யும் விதங்களை கற்றுக்கொள்கிறோம், வீடுகள் கட்டும் முறைகளை கற்றுக்கொள்கிறோம், வாகனங்களை திருத்தம் செய்யும் முறைகளை கற்றுக்கொள்கிறோம், வாகனங்களை ஓட்டுவதற்கு கற்றுக்கொள்கிறோம், மருந்து மூலிகைகள் தொடர்பாக கற்றுக்கொள்கிறோம், ஆனால் இவற்றை கற்பதால் நாம் ஒரு நாளும் வாழ்வினை உய்த்துணர மாட்டோம். துக்கத்திலிருந்து விடுதலையடைவும் மாட்டோம்.

## சீல, சமாதி, ஞானம் என்பன விருத்தி செய்யும் முறையையே கற்க வேண்டும்

புத்த பகவான், ‘சீலத்தினை பாதுகாக்கும் முறையினை கற்றுக்கொள்ளுங்கள், உளச்சமாதியை வழுப்படுத்தும் முறையை கற்றுக்கொள்ளுங்கள், ஞானத்தினை விருத்தி செய்யும் முறையினை கற்றுக்கொள்ளுங்கள்’ என

மொழிந்துள்ளார். இவைதான் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள். புத்த பகவான் தன் சீடர்களுக்கு சீலம், சமாதி, ஞானம் என்பன விருத்தி செய்யும் முறையை கற்றுக்கொடுத்திருக்கிறார். துக்கத்தினை உய்த்துணரல், துக்க தோற்றத்தினை அழித்தல், துக்க நிவாரணத்தை உறுதி செய்தல், அதற்கான வழியில் பயணித்தல் எனும் விடயங்களை தெட்டத்தெளிவாக விளக்கி கற்றுக்கொடுத்திருக்கிறார். இந்த உத்தம விடயங்களை கற்றுக்கொள்ளுமாறும் கூறியிருக்கிறார். இந்த விடயங்களை கற்றுக்கொள்ளுவதால் ஒருவர் உன்னத நிலையை அடைய முடியும். இது சிக்கானுத்தரியம்.

வேறு எந்த விடயங்களை கற்றாலும் அதனால் ஒருவர் உன்னத நிலையை அடையமாட்டார். எண்சீர் மார்க்கத்தில் தம்மை நெறிப்படுத்துவது எவ்வாறு என்பதை கற்றுக்கொள்ளும் ஒருவருக்குதான் உன்னத நிலையை அடைய முடியும். வேறு எந்த முறையிலும் ஒருவர் உன்னதத்தையடைய முடியாது. இந்த கல்விதான் இவ்வுலகில் கற்கும் கல்வியில் உன்னதமான கல்வி. பாருங்கள் அறிவுள்ள ஒரு மனிதனுக்கு புத்த பகவானது தர்மத்திலிருந்து எவ்வளவு நன்மைகள் கிடைக்கிறது என்று.

### மரணத்தின் முன் பேராசிரியர்களுக்கும் தோல்வியே!

நான் அறிந்த ஒரு பேராசிரியர் இருந்தார். நன்றாக கல்வி கற்ற ஒருவருக்குதானே பேராசிரியராக முடியும். இந்த பேராசிரியர் வயது முதிர்ந்து நோயால் பீடிக்கப்பட்டார். அதன் விளைவாக பக்கவாதமும் ஏற்பட்டது. அவரால் ஓரளவு எழுந்து நிற்கவும்

அமரவும் மாத்திரமே முடியும். நானும் இன்னும் சிலரும் அவரை பார்க்க சென்றோம். அப்போது நாம் கண்டதோ அவர் மலம் கழித்து அந்த மலத்தை தன் உடம்பெங்கும் பூசிக்கொண்டது மட்டுமல்லாது தன் வாயிலும் பூசிக்கொண்டிருக்கும் காட்சியே ஆகும். இந்த காட்சியை கண்டு நான் 'இவர் கற்ற கல்வி எவ்வளவு தாழ்மையான விடயமென்று' நினைத்தேன் இப்போது தன்னுடைய மலத்தையே தன் உடலிலும் வாயிலும் பூசிக்கொண்டிருக்கும் இவரை யாரேனும் 'ஒரு பேராசிரியர்' என்று கூறினால் நம்புவார்களா? இல்லை. நாம் கற்கும் கல்வியின் தரத்தை பார்த்தீர்களா? நான் யோசித்தேன், 'இவர் இக்கல்வியை கற்க முயற்சிக்கும் காலத்தில் சீலம், சமாதி, ஞானம் என்பவற்றை தன்னுள் வளர்த்து கொள்ள முயற்சித்திருந்தால் ஒருபோதும் இந்நிலையை அடைந்திருக்க மாட்டார். சுய உணர்வின்றி மரணித்திருக்கவும் மாட்டார்.' என்று. பாருங்கள் புண்ணியவர்களே! அவர் மனித உலகில் வாழும்போதே தன் இறுதி காலத்தில் தன்னுடைய மலத்தையே உண்ணும் படியாகிவிட்டதென்றால் அவர் கற்ற கல்வி பற்றி என்ன கூறுவது?

ஆனால், அவர் சரியான முறையில் சீலம், சமாதி, ஞானம் எனும் விடயங்களை தன்னுள்ளே உருவாக்கி கொண்டிருந்தால் மிகுந்த விழிப்புணர்வோடும் அமைதியாகவும் தன் இறுதி மூச்சினை விட்டிருப்பார். அதுதான் சரியான கல்வி. உண்மையான படிப்பறிவு என்றால் இவைதான்: நாற்பேருண்மைகள் தொடர்பான அறிவு மற்றும் சீலம், சமாதி, ஞானம் தொடர்பான அறிவு என்பவையாகும். கற்கும் விடயங்களில்

உன்னதமடைவது இந்த விடயங்களை கற்பதினாலேயே!

## சேவையினால் உன்னதமடைதல்

அடுத்த விடயம் தான் பாரிசரியானுத்தரியம். அதாவது சேவையினால் உன்னதமடைதலாகும். பாருங்கள், நாமும் சேவைகள் செய்கிறோமல்லவா? எம் வாழ்க்கை செயற்படும் முறை ஒன்று உள்ளதல்லவா? அதிகாலை எழும்புகிறோம், தேநீர் அருந்துகிறோம். சமைக்கின்றோம். உணவு உண்கின்றோம். மீதி உணவை பொதி செய்து வேலைத்தளத்திற்கு புறப்படுகின்றோம். நண்பர்களை சந்தித்தால் ஏனையோரின் குறைகளை கதைக்கின்றோம். அலுவல் வேலைகளை செய்கின்றோம். நேரத்தை பார்க்கின்றோம், பஸ்ஸில் ஏறுகின்றோம். வழியில் ஏதேனும் ஒரு கடையில் தேவையான பொருட்களை வாங்குகின்றோம். வீட்டை அடைகின்றோம். சமைத்து சாப்பிடுகிறோம். பின் தொலைக்காட்சியை பார்த்து உறங்கிவிடுவோம். நாம் அணிந்திருக்கும் ஆடைகளை கழுவுவதற்கு கூட எமக்கு நேரமில்லை. எம் வாழ்க்கை வட்டம் இதுவே. உறங்கும் உறக்கம் கூட நிம்மதியானதல்ல. ஆயிரம் பிரச்சினைகளை சிந்தித்து கொண்டு தான் நாம் உறங்கவும் செல்கின்றோம். மீண்டும் அடுத்த நாள் அதிகாலையில் எழுவோம். இன்னும் சற்று நேரம் வரை தூங்க நினைத்தாலும் அது முடியாது. தொழில் தளத்திற்கு சென்றாலும் எப்போது மாலை ஐந்து மணியாகும் என பார்த்து கொண்டேயிருந்து நேரம் வந்தவுடன் வேலைத்தளத்திலிருந்து வெளியேறி ஏதாவது ஒரு கடையில் தேவையான மரக்கறிகளை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வருவோம். வந்து

மறுநாளைக்கு தேவையான ஆடைகளை தயார் செய்து வைத்து சமைத்து சாப்பிட்டு உறங்குகிறோம். இப்படித்தான் தான் நாம் வாழும் வாழ்க்கை அமைந்துள்ளது. சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைளில் தான் சற்றேனும் ஓய்வு நேரம் கிடைக்கிறது. அன்று தான் அழுக்கான உடைகளை துவைக்க நேரமிருக்கும். இப்படித்தான் நாம் சேவைகளை செய்கிறோம். இவ்வாறு சேவைகளை செய்து இறுதியில் ஓய்வு பெற்ற பின் தனக்கு என்று, தன்னுடைய உள்ளக வாழ்வுக்கென்று ஒன்றுமே செய்ய முடியாத நிலை தான் உருவாகும்.

## இந்த சேவை எதற்காக

இம்மாதிரியாக சேவைகள் செய்வதால் சேவை செய்யும் தனக்கு என்ன கிடைகின்றது? இதனால் ஒருபோதும் தனக்கு ஒன்றுமே கிடைக்காது. புத்த பகவான் 'எவராயினும் ஒருவர் புத்த பகவானுக்கு சேவை புரிவாராயின் புத்த சீடருக்கு சேவை செய்வாராயின் அதுவே சேவையின் மூலம் உன்னதம் அடையும் சேவையாகும்.' என மொழிந்தார். நாம் நினைப்போம் ஒருவர் ஜேத்தவனராமத்திற்கு செல்கிறார். சென்று அவ்விடத்தினை சுத்தப்படுத்தி ஓரிடத்தில் அமர்கிறார். அவருக்கு புத்த பகவானது தர்மத்தினை செவிமடுக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. தியானம் செய்யும் வாய்ப்பு கிடைகின்றது. இது ஒருவருக்கு உன்னதத்தை தரும் சேவையாகும். இந்த சேவையினூடாக ஒருவர் தன்னை உன்னதப்படுத்தி கொள்ளலாம். புத்த பகவான், 'ஒருவர் சம்மாசம்புத்த பகவான், பச்சேக புத்த பகவான், அரஹத் பிக்குமார் என்போருக்கு சேவை செய்வாராயின்

அவர் அந்த சேவையினால் உன்னதமடைய முடியும்' எனவும் மொழிந்தருளியுள்ளார்.

## சேவையினால் நான் தர்மத்தினை கண்டேன்

எம்மனைவருக்கும் 'கோபிகா' எனும் உபாசகியின் கதை தெரியும். நான்கு பிக்குமார்கள் ஓரிடத்தில் மாரி காலத்தில் தரித்திருந்தார்கள். அவர்களுக்கு சேவை புரிவதற்கு கோபிகா எனும் உபாசகி சென்றிருந்தாள். அவள் அங்கு சென்று அந்த பிக்குமார்களுக்கான அன்னதானம் என்பன வழங்கி அவர்களுக்கு சேவை செய்யும் காலத்தில் ஒரு நாள் அந்த பிக்குமாரிடம் 'புண்ணியமிக்க பிக்குமாரே! தாங்கள் பழக்கப்படுத்தும் தர்மத்தினை எனக்கும் கற்று தருவீர்களாக..' என வேண்டி நின்றாள். அப்போது அந்த பிக்குமாரும் அந்த உபாசகிக்கு தாம் பயிற்சி செய்யும் புத்த பகவானது தர்மத்தினை போதித்தனர். அதனை கவனமாக செவிமடுத்த அந்த உபாசகி தினமும் அவற்றை பயிற்சி செய்தாள்.

அவள் வீட்டிற்கு நடந்து செல்லும் போதும் தியானத்தை பழக்கப்படுத்தினாள். நாம் இந்த தர்மத்தினை கற்கும் போது நடை தியானம் எனும் தியானத்தை பற்றி கற்றிருக்கிறோம். விழிப்புணர்வுடன் நடத்தல் என்பதுவும் ஒரு வகையான தியானமாகும். நாம் விழிப்புணர்வுடன் நடத்தல் என்றவுடன் செய்வது என்ன? இடது கால் - வலது கால் என்று செய்வது, அது சரியா? அவ்வாறில்லாது (கால்) தூக்குகிறேன். கொண்டு செல்கிறேன். வைக்கின்றேன் என்று நினைத்து கொண்டு செய்வது சரியா? இம்மாதிரியான நடை தியானத்தை

புத்த பகவான் மொழியவில்லை. புத்த போதனைகளில் ‘நடக்கும் போது இந்த கண் அநித்தியமானது, இந்த காது அநித்தியமானது, இந்த நாசி அநித்தியமானது , இந்த நாவு அநித்தியமானது, இந்த உடம்பு அநித்தியமானது , இந்த மனம் அநித்தியமானது’ என்பதனை நினைவு கூர்ந்த வண்ணம் நடை தியானத்தை செய்ய வேண்டும். இவ்வாறாக கோபிகா வீட்டிற்கு சென்று தர்மத்தினை பழக்கப்படுத்தினாள். அதன் விளைவாக ஒரு நாள் சோதாபன்ன நிலையை எய்தினாள். பாருங்கள், அவள் சேவையின் விளைவினை பெற்றுக்கொண்டாள். அவள் சேவைகளை செய்தாள். அதன் நற்பேறுகளையும் பெற்றுக்கொண்டாள்

### சேவையினூடாக உன்னதமடைதல்.

ஒருவர் புத்த பகவானிடமோ அல்லது புத்த பகவானது சீடரிடமோ சேவை செய்ய முனைந்தால் அவ்வாறு சேவை செய்யும் காலத்தில் அவருக்கு தர்மத்தினை செவிமடுக்கும் வாய்ப்பு ஏற்படும். அவ்வாறு செவிமடுத்த தர்மத்தினை தம் வாழ்விற்கு ஒருங்கிணைத்து வாழ முற்படுவார். அவர் ஒரு நாள் அந்த தர்மத்தினை தமது வாழ்வில் காணும் வாய்ப்பும் அதனால் ஏற்படும். அவர் சேவையினூடாக உன்னத நிலையை அடைய முடியும். அதுதான் பாரிசரியானுத்தரியமாகும்

### ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்

01. தஸ்ஸனானுத்தரியம்

02. சாவனானுத்தரியம்

03. இலாபானுத்தரியம்

04. சிக்கானுத்தரியம்

05. பாரிசரியானுத்தரியம்

06. அனுஸ்ஸதானுத்தரியம்

அனுஸ்ஸதானுத்தரியம் என்றால் நினைவு கூறும் விடயங்களில் உன்னதமானதற்காகும்.

### நினைவுபடுத்துவது உன்னதமானதொன்றையா?

புத்த பகவான் போதித்தார். ஒவ்வொரு விடயங்களை சிந்திக்கிறோம். ‘இப்போது எனது பெரிய மகள் அமெரிக்காவில், சின்ன மகள் இங்கிலாந்தில்.. மூன்றாவது மகள் ஒரு வைத்தியர், எனது மருமகனுக்குதான் அந்த கடை சொந்தம், சின்ன மகனுக்கு ஒரு கார் இருக்கிறது’. இவ்வாறு நினைத்து கொண்டிருப்பது நினைவு கூறும் விடயங்களில் உன்னதத்தை தருமா? இல்லை.

அதேபோல், எனது ஒரு பிள்ளை இந்த சர்வதேச பாடசாலையில் படிக்கிறாள். பெரிய மகன் பல்கலைக்கழகத்தில் படிக்கிறான். சின்ன மகன் கிரிக்கெட் அணியில் இருக்கிறான். என்று நினைவு கூறுவதெல்லாம் உன்னதத்தை தருமா? இல்லை.

### மும்மணிகளை நினைவுகூற வேண்டும்.

புத்த பகவான், ‘நினைவுகூறும் விடயங்களில் புத்த பகவானை நினைவு கூறுவதே உன்னதமானதாகும். நினைவுகூறும் விடயங்களில் புத்த பகவானது ஆரிய

சீடர்களை நினைவு கூறுவதே உன்னதமானதாகும்.' என மொழிந்தார். அண்மையில் நான் சிங்களத்திற்கு மொழி பெயர்த்த, புத்த பகவானது ஆரிய சீடர்கள் பற்றி கூறப்படும் 'தேர தேரி' எனும் புத்தகத்தை நீங்கள் வாசித்திருப்பீர்கள். நீங்கள் அந்த புத்தகத்தை வாசித்திருந்தால் அரஹத் பிக்குமாரின் வாழ்வை நினைத்து ஆச்சரியப்பட்டிருப்பீர்கள். அவர்கள் தம் வாழ்வினை எவ்வளவு உன்னதமானதாக வாழ்ந்திருக்கிறார்கள்? வீரியம், ஞானம், ஒழுக்கம், நற்குணங்கள், பணிவு, என்பனவற்றினால் உன்னதத்தையடைந்தோர்களாகவே அவர்கள் தம் வாழ்வினை நடத்தியிருக்கின்றார்கள். இம்மாதிரியான உத்தமர்கள் தான் இந்த புத்த சாஸ னத்தில் இருந்திருக்கிறார்கள். ஒருவருக்கு தாம் சரணடைந்த மும்மணிகளை நினைவுகூறுவதற்கான திறமை இருக்க வேண்டும். இந்த திறமை இல்லாவிடில் அது அவருக்கு பெரும் நட்டமேயாகும்.

## அவர் என்னை தூற்றினார்.. அவர் என்னை தோற்கடித்தார்..

அவ்வாறில்லாவிடில் 'அவர் என்னை ஏசினார்' **(அக்கொச்சி மங்)** 'அவர் என்னை துன்புறுத்தினார்' **(அவதி மங்)** 'அவர் என்னை தோற்கடித்தார்' **(அஜினி மங்)** 'அவர் என்னுடைய பொருளை அபகரித்துவிட்டார்' **(அஹாசி மே)** 'அவர் என்னை நிந்தித்தார்.' என்று தான் நினைவு கூற வேண்டும்.

வீட்டுப்பெண்கள் இவ்வாறு சிந்தித்து கொண்டு அரிசியை கழுவும் போது என்ன செய்வார்கள்? கழுவும் அரிசியிலிருந்து ஒரு பிடியை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு அதனை மென்றுக்கொண்டு

தனியாகவே பேசுவார்கள் ‘இவர்கள் என்னை என்ன அநியாயம் செய்தார்கள்’ என்னை எப்படியெல்லாம் ஏசினார்கள்’ என சிந்தித்து கொண்டிருப்பார்கள். சாதாரணமாக வீடுகளில் இவ்வாறு நடப்பதில்லையா? நினைவு கூறும் விடயங்களில் இவற்றை நினைவு கூறுவதால் மென்மேழும் கோபம் தான் அதிகரிக்கும். துவேசம், பழிவாங்கும் எண்ணம். ஒன்றுக்கொன்று செய்தல் போன்ற இழிவான எண்ணங்களே தோன்றும். அவை ஒருபோதும் நன்மையை விளைவிக்காது. நினைவு கூறுவதாயின் புத்த பகவான் அவரது தர்மம், புத்த பகவானது ஆரிய சீடர்கள் எனும் மும்மணிகளையே நினைவு கூறுங்கள்.

**இவ்வாறு நினையுங்கள்.**

புத்த பகவான் ஒரு சந்தர்ப்பத்தில் தன்னுடைய சீடர்களான பிக்குமார்களிடம் ‘புண்ணியமிக்க பிக்குக்களே! தேவையற்ற விடயங்களை நினைத்து கொண்டிருக்க வேண்டாம். சிந்திப்பதாயின் சிந்தியுங்கள் ‘இது துக்கம்’ என்று. சிந்திப்பதாயின் சிந்தியுங்கள் ‘இந்த துக்கம் காரணத்தினால் தோன்றியது’ என்று. சிந்திப்பதாயின் சிந்தியுங்கள், ‘இந்த காரணத்தை அழித்தால் துக்கத்திலிருந்து விடுதலை பெறலாம்’ என்று. சிந்திப்பதாயின் சிந்தியுங்கள், ‘எண்சீர் மார்க்கத்தில் பயணிப்பதால் இந்த காரணத்தை இல்லாதொழிக்கலாம் என்று’ இவ்வாறு தான் சிந்திக்க வேண்டும். இப்படி சிந்திக்கும் போது மனதில் தம்மானுஸ்ஸதி எனும் தியானமே விருத்தி அடைகிறது. ஒருவர் இவ்வாறு நினைவு கூறும் போது அவர் நினைவு கூறும்

விடயங்களினூடாக உன்னதத்தையடைகிறார்.

நாம் இப்போது ஆறு விடயங்கள் தொடர்பாக பேசினோம். அவை முறையே தஸ்ஸனானுத்தரியம், சாவனானுத்தரியம், இலாபானுத்தரியம், சிக்கானுத்தரியம், பாரிசரியானுத்தரியம், அனுஸ்ஸதானுத்தரியம் என்பவையாகும். இந்த ஆறு விடயங்களையுமே எம்முள் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

**தர்மத்தினை உணர்ந்தவருக்கு!**

எம்மால் தற்காலத்தில் புத்த பகவானை நேரடியாக காண முடியாது. ஆனால் ஒருவருக்கு தர்மத்தினூடாக புத்த பகவானை காண முடியும். புத்த பகவானது திருவாயினால் நேரடியாக எமக்கு தர்மத்தினை கேட்க முடியாது. ஆனால் அவரது உத்தம தர்மத்தினை இன்றும் எமக்கு கேட்கும் வாய்ப்பு இருக்கிறது. இன்றும் எம்மால் புத்த பகவானது உத்தம சீடர்கள் மீது பக்தியை உருவாக்கி கொள்ளவும் முடியும். இன்றும் எம்மால் தர்மத்தினை செவிமடுத்து அதன் வழி பயணித்து வாழ்வினை புனிதமாக்கி கொள்ள முடியும். இன்றும் எம்மால் புத்த பகவானையும் அவரது சீடர்களையும் நினைவு கூற முடியும். அதனால் எம் அனைவரது வாழ்விலும் உன்னதமான இந்த ஆறு விடயங்களையும் உருவாக்கி கொள்ள முடியும்.

**ஞானமுள்ளவர்களுக்கு இந்த சன்சாரத்திலிருந்து மீள முடியும்.**

இந்த விடயங்களை எம்முள் நாம் உருவாக்கி கொள்ளும் போது நாம் உன்னத நிலையை அடைவோமே அன்றி ஒருபோதும் இழிவான நிலைக்கு

ஆளாக மாட்டோம். ஆகையால் இந்த விடயங்களை தம்முள் ஏற்படுத்தி கொள்ள வேண்டுமாயின் அறிவால் சிந்திக்கும் திறமை எம்மிடம் இருக்க வேண்டும். அறிவினால் ஆராயும் திறமை எம்மிடம் இல்லாவிடில் அது எமது துர்ப்பாக்கியமே!

எனவே, ஒவ்வொருவரும் அறிவினால் ஆராயும் திறமை, ஞாபக சக்தி என்பவற்றை மென்மேலும் வளர்த்து கொள்ள வேண்டும். குறுகிய மனப்பான்மையை நீக்கி பரந்தளவிளான மனதினை ஏற்படுத்தி கொள்ள முயற்சிக்க வேண்டும். இவ்விடயங்களை உருவாக்கி கொள்ளும் போது எம்மால் சீக்கிரமாகவே நாற்பேருண்மைகளை உய்த்தறிந்து கொள்ள முடியும். எனவே அனைத்து புண்ணியவர்களுக்கும் இந்த விடயங்களை தத்தமது வாழ்வினுள் உருவாக்கி கொண்டு உன்னத நிலையை அடையவும் இந்த கௌதம புத்த சாசனத்திலேயே உன்னதமான நாற்பேருண்மைகளை உய்த்தறிந்து கொண்டு பரம சுந்தரமான மோட்சத்தினை அடைய அதிஷ்டம் கிட்ட வேண்டும்.

**சாது! சாது!! சாது!!!**

# அருஞ்சொற்கள்

01. மும்மணிகள் - புத்த பகவான், ஸ்ரீ சத்தர்மம், ஆரிய மகா சங்கத்தினர்

02. போதுஜ்ஜனர் - மும்மணிகளை சரணடையாதவர், தர்மத்தினை அறியாதவர். வாழ்க்கையின் யதார்த்தத்தை உணராதவர். இப்படிப்பட்டவர் தன் தாய் தந்தையைரை கொலை செய்வதற்கோ அல்லது அரஹத் பிக்குமாரை கொலை செய்வதற்கோ தயங்கமாட்டார். புத்த பகவான் ஒருவரது திருவுடலின் குருதியை தீய எண்ணம் கொண்டு தீண்டத்தயங்காதவர். சங்க பேதம் செய்ய தயங்காதவர். இவ்வியல்புகளை கொண்டவராக இருப்பவரே போதுஜ்ஜனர் என புத்த பகவான் மொழிந்துள்ளார்.

03. அரஹத் - ஆசை, கோபம், அறியாமை எனும் மனவழுக்குகளையும் அதன் படிவுகளையும் முற்றாக நீக்கியவர். மீண்டும் பிறவி எடுக்காத நிலையை எய்தியவர்.

04. பஞ்ச உபாதானஸ்கந்தங்கள் - உருவம், அனுபவிப்பு, இணங்காணல், சிந்தனை, விஞ்ஞானயம் எனும் ஐந்துமாகும்.

05. ஆர்ய தர்மம் - புத்த பகவான் போதித்த தர்மம்

06. மூட நம்பிக்கைகள்:

*. தானம் அளிப்பதில் விளைவுகள் இல்லை.

*. பூஜைகளில் விளைவுகள் இல்லை

*. சேவை மற்றும் பணிவிடை செய்வதில் விளைவுகள் இல்லை.

*.கர்மம் மற்றும் கர்மபலன்கள் இல்லை.

*.இவ்வுலகம் என்று ஒன்றில்லை.

*.மறுவுலகம் என்று ஒன்றில்லை.

*. தாய் என்பவள் விசேடமானவள் அல்ல.

*. தந்தை என்பவர் விசேடமானவர் அல்ல.

*. தாய் தந்தை இல்லாது, முட்டையினுள் பிறவாது, ஈரலிப்பான இடத்தில் இல்லாது எடுக்கும் பிறவிகள் அதாவது ஓபபாதிக பிறப்புக்கள் உண்டு என்பதனை நம்பாதிருத்தல்

*.இவ்வுலக உண்மைகளை உய்த்துணர்ந்து ஆசை, கோபம், அறியாமை என்பன முற்றாக நீக்கிய, சாதாரண மனித தன்மையை மீறிய உத்தமர்கள் இருக்கிறார்கள், என்பதனை நம்பாதிருத்தல். இவையே புத்த பகவான் மூடநம்பிக்கைகளாக மொழிந்தருளியுள்ளார்.

07. சம்மா திட்டி அல்லது தெளிவான பார்வை.

*.தானம் அளிப்பதில் விளைவுகள் உண்டு

*. பூஜைகளில் விளைவுகள் உண்டு

*.சேவை, பணிவிடை செய்வதில் விளைவுகள் உண்டு

*.கர்மம் மற்றும் கர்மபலன்கள் உண்டு

*.இவ்வுலகம் என்று ஒன்றுள்ளது

*.மறுவுலகம் என்று ஒன்றுள்ளது.

*.தாய் என்பவள் விசேடமானவள்.

*.தந்தை என்பவர் விசேடமானவர்.

*.தாய் தந்தை இல்லாது, முட்டையினுள் பிறவாது, ஈரலிப்பான இடத்திலில்லாது எடுக்கும் பிறவிகள் உண்டு அதாவது ஓபபாதிக பிறப்புகள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

*.இவ்வுலக உண்மைகளை உய்த்துணர்ந்து ஆசை, கோபம், அறியாமை என்பன முற்றாக நீக்கிய, மனித தன்மையை மீறிய உத்தமர்கள் இருக்கிறார்கள் என்பதனை நம்புதல். இவையே புத்த பகவான் தெளிவான பார்வை அதாவது 'சம்மா திட்டி' என மொழிந்தருளியுள்ளார்.

08. நாற்பேருண்மைகள்: துக்கம், துக்கத்தின் தோற்றம், துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம்.

09. நீவரணங்கள் எனப்படுவது மன ஒன்றிணைவை தடுக்கும் ஐந்து விடயங்கள் என புத்த பகவான் மொழிந்துள்ளார். அவை பின்வறுமாறு:

*. காமச்சந்தம்: கண்களுக்கு சுகம் தரும் உருவங்கள், காதிற்கு இனிமையான சப்தங்கள், இனிமையான நறுமணங்கள், இனிமையான சுவைகள், இதம் தரும் உடலுணர்வுகள், மனதிற்கு இனிய

எண்ணங்கள் தொடர்பாக சிந்தித்து கொண்டிருத்தல்.

*.வியாபாதம்: மனதிற்கு கோபம் உருவாகும் விடயங்கள் தொடர்பான சிந்தனைகள்

*.தீனமித்த: சோம்பல் மற்றும் தூக்கக்கலக்கம்.

*.உத்தச்ச குக்குச்ச: மன உழல்வு மற்றும் மன ஒடுக்கம்.

*.விசிகிச்சா: தர்மம் தொடர்பான சந்தேகம். இவையே ஐவகையான நீவரணங்களாகும்.

10. மாரன்: உயிர்களை சன்சாரத்தில் பிணைத்து வைத்திருப்பவர்.

11.சோவான் நிலை: வீடுபேற்றின் முதலாவது நிலை. மனதிலுள்ள சக்காய திட்டி, சீலப்பத பராமாசம், சந்தேகம் என்பவற்றை நீக்கியவர். இப்பேற்றினை அடைந்தவர் ஒருபோதும் நால்வகை நரகங்களில் பிறக்கமாட்டார். அதேபோல் கூடியபட்சம் ஏழு பிறவிகளிலே மோட்சத்தை அடைந்து விடுவார்.

12. அநாகாமி: மனமாசுகளில் மூன்றில் இரண்டினை முற்றாக நீக்கியவர். அதாவது ஆசை மற்றும் கோபத்தினை முழுமையாக நீக்கியவர். ஒரு பிறவியை பிரம்ம உலகத்தில் பிறந்து அங்கேயே பரிணிர்வாணம் அடையும் உத்தமர்.

**நமோ புத்தாய!**